Registered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol. 38—No. 3

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 38 | குரோதி பங்குனி 1965 மார்ச்சு | இதழ் 3

உள்ளுறை

பத்திராசிரியர்: மு. அருணாசலம், எம். ஏ.,
உதவிப் பத்திராசிரியர்: வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

ஆண்டுச் சந்தா ரூபா. 3 தனிப்பிரதி அணா 4

சமாஜச் செய்திகள்

28—3—65 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு சமாஜச் செயற்குழுக் கூட்டம் அலுவலகத்தில் நிகழும். உறுப்பினர்கள் யாவரும் தவருது வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிருர்கள்.

14—2—65 ஞாயிறன்று மாலை 6 மணிக்கு சமாஜச் சார்பில் கண்ணப்ப நாயனுர் திருவிழா சிந்தாதிரிப்பேட்டை இளைஞர் ஒற்றுமை மன்றத்தின் ஆதரவில் கொண்டாடப் பெற்றது. திரு. M. K. குமரவேல் செட்டியார் அவர்கள் தலைமையில் திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளையவர்கள் கண்ணப்பர் பற்றிப் பேசினுர்கள், செயலாளர் வரவேற்க, திரு. V. ஆறுமுக முதலியார் அவர்கள் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

முக்கிய அறிவிப்பு

நம் சமாஜ உறுப்பினர்களில்சிலர் 1965க்குரியசந்தாவை இன்னும் அனுப்பவில்லை. அதனுல் மார்ச்சு மாதத்திய சித்தாந்த இதழை V.P.P.யில் அனுப்பினுல் "நம்பாமல் இவ்வாறு வீண் செலவுக்கு ஆளாக்கலாமோ" எனச் சில அன்பர்கள் கருதுகின்றனர். வேறுசிலர் "V.P.P.யில் அனுப்புவது தானே வழக்கம்; அம்முறையிலேயே அனுப்பி வையுங்கள்" எனவும் கூறுகின்றனர். உறுப்பினர்கள் இவ்வாறு இருவேறு எண்ணங்கள் கொண்டுள்ளவராயிருத்தலின் இதுகாறும் அனுப்பாதவர்கள் இவ்வறிக்கை கண்டதுமாவது உடனேசந்தாவை சமாஜச் செயலாளர் முகவரிக்கே அனுப்பிவைக்க வேண்டுகிருேம். இல்லையேல் ஏப்ரல் மாத இதழ் அவசியம் V.P.P.யில் அனுப்பிவைக்கப் பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிருேம்.

சமாஜ ஆக்கவேலைகள் முன்னேற வேண்டுமா? அதற்கு ஒரேவழி தக்க அறிஞர்கள் எல்லோரையும் உறுப்பினராக்குவதுதான். மிகப் பெருஞ்செல்வர்கள் ஆயுள் உறுப்பினராகலாம். மற்றையோர் சாதாரண உறுப்பினராகலாம். ஆயுள் உறுப்பினர் கட்டணம் ரூ. 50-00, சாதாரண உறுப்பினர் கட்டணம் ரூ. 3-00 ஆகும். ஆகவே நம் சமாஜஉறுப்பினர்களாம் பழவடியார்கள் ஒவ்வொருவரும் பத்துப் பத்துப் புது அடியார்களைச் சேர்த்துத் தந்து சமாஜப் பணிகளுக்குறு துணையாயிருந்து ஊக்கவேண்டுகின்ருேம். இன்னே முனைந்து ஆவன கருத விரும்புகின்ருேம்,

திரு. M. இராமாநுஜம் பிள்ளை,
(38, கிழக்குத் தெரு, திருக்கோயிலூர்,
தென்னுர்க்காடு மாவட்டம்.)

அவர்கள் நம் சமாஜ ஆயுள் உறுப்பினராய்ச் சேர்ந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிருேம்.

Reg M. 2330 உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 38 | குரோதி பங்குனி 1965 மார்ச் | இதழ் 3

திருவாசகத் திருவுள்ளக்கிடை

(ஆசிரியர்)

—☆—

திருவாசகம் 51 பகுதிகளும் 51 பதிகங்கள் என வழங்குவதுண்டு. இவையாவுமே பதிகங்களல்ல. பதிகம் என்பது பத்துப்பாடல் கொண்டது; இது பத்து என்றும் வழங்கும். அன்னைப்பத்து, குயில் பத்து முதலான 20 பதிகங்கள் பத்து என்ற தலைப்பிலேயே இன்று திருவாசகத்துள் உள்ளன. இவைபோக கோயில் மூத்த திருப்பதிகம், கோயில், திருக்கழுக்குன்றம், திருப்பாண்டி, எண்ணப் பதிகம், அச்சோ ஆகிய ஆறும் பதிகம் என்றே வழங்குகின்றன. இவற்றுள் கழுக்குன்று, எண்ணப்பதிகம், அச்சோ மூன்றும் பத்துப்பாடல்களினும் குறைந்தவை. இனி சிவபுராணம் கலிவெண்பா; அடுத்த மூன்றும் அகவற்பா; அடுத்த சதகம் 100 பாடல்; நீத்தல் விண்ணப்பம் 50 பாடல்; பின் பல பகுதிகள் 20 பாடல்; திருப்புலம்பல், படையெழுச்சி இரண்டும் 3, 2 பாடல்கள் எனினும் தலைப்புகள் யாவற்றையுமே பதிகம் என்ற பொதுவான பகுதித்தலைப்பினாலேயே குறிப்பிடுதல் மரபு.

இனி ஒவ்வொரு பதிகத்துக்கும் அதன் கருத்து தலைப்பில் எழுதப்பட்டுள்ளது. இக்கருத்து மிகப்பழமையான ஏடுகளிலும் காணப்படுகின்றது. இத்தலைப்புக்கள் திருவாசகத்தின் திருவுள்ளக் கிடை என்ற பெயரோடு வழங்குகின்றன. உதாரணம்: சிவபுராணம்=சிவனது அநாதி முறையான பழமை என்பது தலைப்பு. சில ஏடுகளில் இதற்கு விளக்கமாக "சிவனது அருவ நிலைமை கூறல்" என்ற குறிப்பும் காணப்படுகிறது. இவ்விரண்டுமே பல திருவாசகப்பதிப்புக்களில் அச்சிடப்பட்டுள்ளன.

இனி "திருவாசகச் சிறப்பு" என்ற 24 விருத்தங்கள் கொண்ட ஒரு பகுதி பல பதிப்புகளில் சேர்க்கப்பட்டுள்ளன. இதன் அடிக்குறிப்பு "திருப்பெருந்துறைப் புராணத்துள் திருவாசகச் சிறப்புரைத்த சருக்கத்துட் கண்டது" என்று காணப்படுகின்றது. திருப்பெருந்துறைப் புராணம் மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பாடியது; 1656 பாடல்கள் கொண்டது. சென்ற நூற்றாண்டின் இறுதியில் (1892) இது அச்சிடப்பட்டது. இதுவே பிரசித்தமாய் வழங்குவது. இதனுள் இப்பகுதி இல்லை. இது "பழைய திருப்பெருந்துறைப் புராணம்" என்ற புராணத்தில்உள்ளது என்பார்கள். இப்புராணமும் பின்வந்த பிள்ளையவர்கள் பாடிய புராணமும் கடவுள் மாமுனிவர் பாடிய திருவாதவூர் புராணமும் கதைப் போக்கில் சிறு சிறு மாறுதலுடையவை. இவை அனைத்தும் திரு அனவரத விநாயகம் பிள்ளையவர்கள் தம்முடைய "மாணிக்கவாசகர் வரலாறு" என்ற நூலில் விரிவாக ஆராய்ந்திருக்கிறார்கள். பழைய புராணங்கள் இரண்டு; சாமிநாத முனிவர் பாடிய பெருந்துறைப்புராணம்; சுந்தரலிங்க முனிவர்பாடிய ஆதிகைலாய மான்மியம் ஆனால், இப்பழைய புராணங்கள் இதுவரை அச்சானதாகத் தெரியவில்லை. இவற்றை அச்சில் வெளிப்படுத்த வேண்டுவது மிகவும் அவசியம்.

இதிலுள்ள திருவாசகச் சிறப்புக் கூறும் கருத்துக்கும், சம்பிரதாயமாக அச்சிடப்பட்டுள்ள கருத்துக்கும நிரயப

வேற்றுமையுண்டு. உதாரணமாக சிவபுராணத்தின்கருத்து "சிவபுராணத் தகவல் பெருமை சொலின்-ஈசர் தமக்குஇயல் பான திருநாமம் முதல் எவையும் ஆசறவே வாழ்கவென வாழ்த்துகின்ற அருட் குறிப்பாம்'' என்று இது கூறுகின் றது. வேற்றுமை வெளிப்படை.

இனி மூன்றாவதாக அகத்தியர் ஒரு திருவுள்ளக்கிடை எழுதினார் என்ற கூற்றுவுண்டு. இதை ஏடுகளில் கண்டு ஆராய்ந்து திரு அனவரத விநாயகம் பிள்ளையவர்கள் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்துப் பதிப்பொன்றில் வெளி யிடச் செய்தார்கள். அது 109 அடிகளுடைய ஆசிரியப்பா.

ஆணிப்பொன் ஞார்மிளிர் அணிமதிள் தில்லையுள்
அழகிய திருச்சிற் றம்பல முடையார்
எழுதிய திருவா சகத்தனு பூதியை
மிகத்தரு ஞான விநோத குகருடி
அகத்துணர் ஞான அகத்தியன் தொகுத்தனன்
செகத்தறி வுடையோர் தெளிதரற் பொருட்டே.

என்பன அதன் இறுதி வரிகள். இதனால் இதற்கு இடப் பட்ட பெயர் திருவாசகத்தனுபூதி என்று தெரிகிறது. அகத்தியர் என்ற பெயர், பெரியவர் எவரையும் அகத்தியர் என்னும் வழக்கினாலோ, பெயர் தெரியாதவர் எவரையும் அகத்தியர் என்னும் வழக்கினாலோ எழுந்திருக்கலாம்.

சென்ற நூற்றாண்டில் திருவாசகத்துக்கு அனுபூதியுரை எழுதிய காழித்தாண்டவராயர், இவ்வகத்தியர் திருவுள்ளக் கிடக்கையை எடுத்து ஒவ்வொரு பதிகத்தின் தலைப்பிலும் அமைத்து, "அகத்தியர் அனுபவச் சூத்திரம்'' என்றுபெயர் கொடுத்து இருக்கிறார். பாடபேதங்கள் சில இருப்பினும் இதுவும் அகத்தியர் திருவுள்ளக் கிடையும் (திருவாசகத் தனுபூதி) ஒன்றே. இதுவே பதிகத்தலைப்பாக இப்போது அச்சிலுள்ள பதிப்புகளில் காணப்படும் கருத்தும். பெருந் துறைப் புராணம் கூறும் கருத்தொன்றே இவற்றுக்கு

வேருயுள்ளது. இரண்டையும் ஒப்பு நோக்கிப் பார்த்தால் அகத்தியர் திருவுள்ளக்கிடை (வழங்கும் தலைப்பு) என்பது சாத்திர ரீதியாகப் பதிப்பின் கருத்தைத் தெரிவிப்பது என்பதும், பெருந்துறைப் புராணம் கூறும் கருத்து சாத்திர பரிபாஷையில்லாத சாமானிய மொழியில் பதிகத்தின் கருத்தைத் தெரிவிப்பது என்பதும் விளங்கும். சில இடங்களில் முந்தியதினும் பார்க்கப் பிந்தியது கூறும் கருத்தே சிறப்பாகவும் ஏற்புடையதாகவும் இருத்தலையும் காணலாம்.

அச்சிட்ட திருவாசகத் தலைப்புகளில் காணும் குறிப்பையும் அகத்தியர் திருவுள்ளக் கிடையையும்ஒப்பு நோக்கிப் பார்க்கும் போது பிற்காலத்தில் பக்திமான் ஒருவர் தலைப்புகளாக எழுதி வைத்துள்ள குறிப்புகளை ஓர் அகவல் பாவாகத் தொகுத்து அதற்கு அகத்தியர்திருவுள்ளக்கிடைஎன்று பெயரிட்டார் என்றே அல்லது ஒருவர் திருவாசகக் கருத்துக்களைப் பாவாகப் பாடிவைக்கப் பக்திமானொருவர், அதிற் கண்ட தொடர்களைத் தனியே எடுத்துப் பதிகத்தின் கருத்தாகத் தலைப்பில் அமைத்தார் என்றே முடிவு செய்ய இடமிருக்கிறது. ஆயினும் இரண்டில் எது நிகழ்ந்தது எக்காலத்தில் நிகழ்ந்தது என்று முடிவு செய்ய இப்போது ஆதாரமில்லை. எனினும் இவை மிகப்பழங்காலத்தன என்று மட்டும் கருதலாம்.

ஆயினும் "அகத்தியர் தேவாரத் திரட்டு" என்ற தொகுப்பு தோன்றிய காலத்திலேயே இக்கருத்துக்களும் அமைக்கப் பெற்றிருத்தல் வேண்டும். கி. பி. 14—15 ஆம் நூற்றுண்டுகள் சைவ சமயத்தில் ஒரு சமய மறுமலர்ச்சி உருவாக்கிக் கொண்டிருந்த காலம். அக்காலத்தில் சித்தாந்த சாத்திரமாகிய சிவப்பிரகாசத்துக்குச் சமமான சிறப்புடைய "திருநெறி விளக்கம்" பாடிய ஆசிரியரின் குருவாக இருந்த சிவாலய முனிவர் என்பவருக்காகப் பொதிகையில் இருந்த பெரியார் ஒருவர் (இவரை உபசாரமாக அகத்தியர் என்று சொல்வதுண்டு) 25 தேவாரப் பதிகங்களைத் திரட்டி அவற்றுக்குத் தேவாரத் திரட்டு என்ற பெயரையும் தந்து

குருவருள் வெண்ணீறு, எழுத்தைந்து முதலான எட்டுப் பதிகக் கருத்துக்களையும் அமைத்துக் கொடுத்தார். (சித்தாந்தம் 1961 மார்ச்சு மாத இதழ் பக்கம் 104—109 பார்க்க) "தோடு கூற்றுப்பித்தா மூன்றும்—பீடுடைத் தேசிகன் பேரருளாகும்" என்ற அகவற்பாவினுல் 25 பதிகங்களின் கருத்துக்களும் நினைவுக் கெளிதாய்இருக்கும்படித் தொகுக்கப் பெற்றன. தேவாரத்தின் கருத்துப்புதிதாய் அமைத்துத் தொகுத்தபோது அதே பெரியார், திருவாசகத்தின் கருத்தையும் தொகுத்துப் பாவாக அமைத்து வைத்தார் என்று நாம் கருதலாம். தேவாரத் திரட்டு தொகுக்கப் பெற்ற காலம் கி. பி. 1375—1400.

கிடைக்கின்ற பழைய திருவாசக ஏடுகள் அனைத்திலுள்ளும் இக்கருத்துகள் எழுதப் பெற்றுள்ளன. கிடைக்கின்ற மிகப் பழைய ஏடுகள், சுமார் 500 ஆண்டுகளுக்கு அப்பால் எழுதப் பெற்றவை. ஆதலால் இக்கருத்துக்கள் தேவாரக் கருத்து எழுதப் பெற்ற காலத்திலேயே எழுதப் பெற்றன என்றும், அதை எழுதிய ஆசிரியரே இதை எழுதினர் என்றும் கொள்வதில் தவறில்லை. அகத்தியரே தேவாரத் திரட்டைத் தொகுத்தார்; அகத்தியரே இத் திருவாசகத் திருவுள்ளக்கிடையும் எழுதினர் என்ற பெயரொற்றுமையும் இம்முடிவுக்குத் துணை செய்கிறது.

பங்குனி மாத விசேடதினங்கள்

4 (17—3—65) பங்குனி உத்திர விழா
7 (20—3—65) காரைக்காலம்மையார் விழா
17 (30—3—65) தண்டியடிகள் நாயனர் விழா
24 (6—4—65) நேச நாயனர் விழா
26 (8—4—65) கணநாத நாயனர் விழா
27 (9—4—65) முனையடுவார் நாயனர் விழா

திரு எறும்பியூர்

(மு. அ.)

இடம்:— இக்கோயில் திரிசிராப்பள்ளியிலிருந்து தஞ்சை போகும் பெரிய கற்சாலையில் கிழக்கே ஐந்தாவது மைலில் சாலையில் இடதுபுறம் சிலகஜதூரத்தில்உள்ளது. சிறு மலை என்று சொல்லத்தக்க ஒரு பெரிய பாறையின் மீது அமைந்துள்ளது.

பெயர்:— எறும்பு பூசித்த தலம் ஆதலால் திரு எறும்பியூர், திருவரம்பூர் என்று பெயர் வழங்கும். ஊர் இப்போது பெரிய தொழிற்சாலைகள் வளருகின்ற இடமாகி விட்டது. ஸ்வாமி பழைய பெயர் மாணிக்க வண்ணர்; "எறும்பியூர் மலைமேல் மாணிக்கத்தை" என்ற அப்பர் தேவாரத்தைக் காண்க. இப்போதைய பெயர் எறும்பீசுவரர்; பிபீலிகாநாதர்; அம்பிகை நறுங்குழல் நாயகி சௌரப்பிய குந்தளாம்பிகை; தல விருட்சம் வில்வம்

—வன்பார்.

"நறுங்குழலி நாயகியை நல் லெறும்பி யூரில்
பெறும்எறும் பீசப் பிரானே."

கோயில்:— மலைமேல் கோயில் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் திருப்பணி செய்யப்பட்டதாகச் சொல்லுகிறார்கள். மதில் சுவர் உட்பட முழுமையும் கல். கிழக்கு நோக்கிய சந்நிதி. எதிரில் பெரிய திருக்குளம். 100-க்கு மேற்பட்ட படிகளை ஏறிக் கோயிலை அடையலாம். நேர் எதிரிலிருந்த படிகள் சிலமாகிப் போயின. சிறிது தென் புறம் தள்ளி சிறு வாயிலும் மண்டபமும் படிகளும் அமைத்து இருக்கிறார்கள். வடபுறம் மதில் சுவரில் வாயில், அதற்கு வடக்கே தனியே அம்பிகை கோயில் இருந்து, முகம்மதியர் கலகத்தில் இடிபட்டது என்று குருக்கள் கூறுகிறார். அதன் சின்னங்களாக உத்திரம் தாங்கியபடியே தூண்கள் காணப்படுகின்றன. அடிப்படை வரிகள் வேலைப்பாட்டோடு அமைந்துள்ளன.

கோயில் பழைய கோயில்; நல்ல நிலைமையில் உள்ளது. ஸ்வாமி சந்நிதி எதிரில் தென் முகமாக அம்பிகை கோயில் கட்டியிருக்கிருர்கள். வெளிப்பிராகாரங்கள் நன்கு பாது காக்கப் பெறவில்லை.

மூர்த்தி:— ஸ்வாமி வலதுபுறம் சாய்ந்து இருக்கிருர். சுயம்பு, மிருத்தியுலிங்கம்; அபிஷேகம் ஆவுடையாருக்கு மட்டுந்தான். வாயிலில் இரு புறமும் விநாயகர்; முருகர் மயிலோடு அழகான கோலம்; கோட்டங்களில் முறையே விநாயகர், நான்கு முனிவரோடு கூடிய தட்சிணுமூர்த்தி, இதன்மேல் சுவரில் நடராஜ வடிவம். பின்புறக் கோட்டத் தில் ஹரிஹரன் என்ற அழகிய பெரிய சங்கர நாராயண வடிவம்; ஆனுல் இதன் கைகள் உடைந்து பின்னம்; வட புறக் கோட்டங்களில் பிரமன் துர்க்கை. மற்றும் நிருதி விநாயகர், அறுமுகம் உடைய சண்முகர் தேவியரோடு, கஜலட்சுமி, சண்டேசுவரன், நவக்கிரகங்கள், காசி விசுவ நாதர் உருவங்கள் இரண்டு, நால்வர், பழைய அம்பிகை உருவம் பெரியது பின்னமாகித் தனியே வைக்கப்பட்டுள் ளது. நவதீர்த்தங்கள் இருந்து இப்போது மூன்று தீர்த் தங்கள் இருப்பதாகச் சொல்வர்.

வரலாறு:— இராவணனுடைய வீரர்களான கரன் திரிசிரா, தூஷணன் மூவரும் முறையே எறும்பியூர், சிராப்பள்ளி, கற்குடி ஆகிய மூன்று தலங்களில் சிவ பெருமானை ஆலயம் அமைத்து வழிபட்டார்கள் என்பது புராணக் கதை. இங்கு கரன் வழிபட்டபோது அவனுக்கு அஞ்சிய இந்திராதி தேவர்கள் பெருமானிடம் கரனை வேறிடம் அனுப்பும்படி வேண்டினுர்களாம். பெருமான் ''அவன் கண்ணில் படாதவாறு நீங்கள் வழிபாடு செய்ய லாம்'' என்று சொல்லவே, தேவர்கள் எறும்பு உருவம் கொண்டு ஒரு தும்பைமலரையும் ஓர் அரிசியையும்கொண்டு வழிபட்டார்களாம். இதனுல் எறும்பியூர் என்ற பெயர். இந்திரன் பலமுறை மலர் எடுத்துக்கொண்டு பெருமான் மீது ஏறி உச்சியில் வைக்க முயன்றபோது ஒவ்வொரு முறையும் கீழே விழுந்தமையால் எம் பெருமான் அவனுக் காகச் சிறிது சாய்ந்து கொடுத்தாராம். பிரமன், இங்

திரன், திருமால் முதலியோர் பூஜித்தனர். "பிரமனோடு மாலவனும் இந்திரனும் மந்திரத்தால் ஏத்தும் சீர் எறும்பியூர்" என்பது அப்பர் திருத்தாண்டகம்.

விழா:— இவ்வூரில் பெரு விழா நடந்தது. தேர் உள்ளது. ஆனால் எவ்விழாவும் இப்போது நடைபெறவில்லை.

பாடல்:— அப்பர் திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் என்ற இரு பதிகங்கள் உள்ளன. அம்பாள் திருநாமத்தை நறுங்குழல் மடவாள்" என்று குறுந்தொகையிலும் "மருவை வென்ற குழல் மடவார்" என்று தாண்டகத்திலும் அமைத்து இருக்கிறார். "மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை எறும்பீச்சுரம் வெண்பா அந்தாதி பாடினார்; அது இப்போது கிடைக்கவில்லையென ஐயரவர்கள் கூறுகிறார். தலபுராணமும் உண்டென்று சொல்வர்.

கல்வெட்டு:— ஸ்வாமி கோயிலின் அடிவரிகள் முழுமையும் கல்வெட்டுகள் நிரம்ப உள்ளன; வேறு பல கல்வெட்டுகள் இருந்து கோயிலைப் பழுது பார்த்த காலத்தில் தனித்தனியே இடம் மாற்றி வைத்து இருக்கிறார்கள். இவற்றுள் சிலவற்றைத்தென்புறச் சுவரிலும் பிராகாரத்து எதிர்ப்புறத்திலும் சில இடத்தில் காணலாம்.

நிர்வாகம்:— தனி நிர்வாகக் குழு உண்டு.

சிறப்பு:— சாலையிலிருந்து பார்க்க உயரத்தில் தெரியும் மிகச் சிறப்பான இந்த ஆலயம் உடனே சிறிதளவு பழுது பார்த்து நல்ல நிலைமையில் வைத்து வரவேண்டியது அவசியம்: சில மாதங்களுக்கு முன் அம்பாள், மாணிக்க வாசகர், உற்சவ மூர்த்திகள் களவாடப்பட்டுப் போயின. ஏனைய உற்சவ மூர்த்திகள் அடிவாரத்திலுள்ள விநாயகர் கோயிலில் பந்தோபஸ்திற்காக வைக்கப்பட்டுள்ளன.

போற்றி மலர் வழிபாடு

(M. P. தியாகராஜன் B. A.)

—✫—

"உயிர் சுதந்திரமிலி" உயிர் அறிவிக்க அறியும் தன்மையுடையது. இறைவனொருவனே தானே விளங்கும் இயற்கையறிவுடையவன் முற்றறிவுடையவன் எனவே அவன் அறிவிக்க அறிவித்தவழி ஒழுகலே உயிர்கள் நிற்க வேண்டிய நெறியாகும். மாணிக்கவாசக சுவாமிகளுக்கே இறைவன் மானுடச் சட்டை தாங்கி வந்து குருந்தமரத் தடியிலிருந்து தீக்கை செய்து உபதேசம் செய்தாரெனின் இறை உணர்ச்சி சிறிது பெற்ற சாமான்ய உயிர்கள் குரு முகமாகக் கேட்டுக்கொள்ள வேண்டுவதில்லை, என்று எண்ணுவது பிழையாகும் பன்னிரண்டாந் திருமுறையில் உபமன்னிய முனிவரைப் பற்றிக் கூறுமிடத்து,

யாதவன் துவரைக் கிறையாகிய
மாதவன் முடிமேலடி வைத்தவன்
பூதநாதன் பொருவருந் தொண்டினுக்கு
ஆதியந்தமிலாமை அடைந்தவன்

என்று சேக்கிழார் பெருமான் கண்ணபிரானே உபமன்னிய முனிவரைக் குருவாக ஏற்று அவருடைய திருவடியை முடிமேல் சூடினரென்ற கருத்தை நினைப்பூட்டுகிருர். எனவே உயிர்களுய்ய குருவேண்டுமென்பது பெறப்படும். ஞான குரு அவரவர்கள் பக்குவத்திற்கேற்பக் கிடைக்கப் பெறினும் முதற்படியாக குலகுருவினிடம் அருளும் ஆசியும் பெறுதல் வேண்டற்பாலதே. உயிர்கள் மாட்டுக்கருணை கூர்ந்தே சைவ சமய நெறியை உணர்த்த இறைவன் நமக்கு நான்கு பரம சமயாசாரியர்களுடைய பாடல்களைத் தந்துள்ளான். எனவே சைவசமய நெறிக்குப் பிரமாண நூல்கள் பன்னிரண்டு திருமுறைகளாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூர் தியாகரையே தனது இஷ்டமூர்த்தியாகக் கொண்டிருந்தனர். திருவொற்றியூரில் தான் சபதம் கூறிச் சங்கிலியாரைத் திருமணம் புரிந்தபோதிலும் தன்னுடைய இஷ்டமூர்த்தியை நினைந்து அங்கிருந்து வெளியேறினர். ஒற்றியூர் எல்லையைக் கடந்ததும் தம்மிரு கண்களையும் இழந்தார். எனினும் திருவாரூர் வந்தடைய

வேண்டுமென்ற அவாவினுல் தயங்காமல் திருஒற்றியூரி னின்றும் புறப்பட்டுவிட்டார். ஒரு கற்புடைய மங்கை தன்னைக் கொண்டவனை விட ஏனைய ஆடவர்கள் அழகி லும் அந்தஸ்திலும் மேம்பட்டிருப்பினும் தன்னுடைய கணவனையே பெருமையாகக் கருதிப் போற்றும் கற்பு நெறிபோன்று தாம் தாம் கொண்ட சமய உண்மைகளி னின்றும் வழுவாதிருப்பதே சமயக் கற்பு நெறியாகும். சைவசமயத்திற்குப் பிரமாணம் பன்னிரு திருமுறைகளே யாகும். அவைகளுள் நாம் கண்டறியும் உண்மைகளுள் முக்கியமான சிலவற்றை யீண்டுக் கவனிப்போம்.

" புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண்டு அருள்புரியா நிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்மிறை யீசனை
நண்ணறி யாமல் நழுவுகின் றாரே.''

என்று 10-ஆம் திருமுறையில் திருமூலர் பாடியிருப்பதைக் காணலாம். இதே கருத்துத் தோன்ற அப்பர்சுவாமிகள்

கற்றுக் கொள்வன வாயுள நாவுள
இட்டுக் கொள்வன பூவுள நீருள
கற்றைச் செஞ்சடை யானுள னுமுளோம்
ஏற்றுக்கோநம னுன்முனி வுண்பதே

என்று பாடியிருப்பதைக் காணலாம், எனவே இறைவனை வழிபடப் பூவும் நீரும் வேண்டற்பாலது என்று தெரியவரு கிறது. நீரினுல் நாம் வழிபடும் மூர்த்தியை ஆட்டிப் பூவி னுல் அர்ச்சித்து வாயார வாழ்த்தி வழிபடவேண்டுவதே முறை என வகுத்துக் காட்டியுள்ளார்கள்.

மற்றும் நான்காம் திருமுறையில் அப்பர் பெருமான்

" பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தற்குப் பத்தராகி
அரும்பொடு மலர்கள் கொண்டு ஆங்கார்வத்தையுள்ளே
வைத்து
விரும்பி நல்விளக்குத் தூபம் விதியினுலிட வல்லார்க்குக்
கரும்பினிற்கட்டி போல்வார் கடவூர் விரட்டனுரே,

என்று கூறுதலால் சிவபெருமானை மலர் தூவி வழிபட வைகறைப் பொழுதே உகந்ததாகும். இக்கருத்தை வலி யுறுத்துமாறு பின்னெரு திருத்தாண்டகத்தில்,

" நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீ வா
நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலைபுனைந்தேத்திப் புகழ்ந்துபாடி...அலராநில்லே "

என்று பாடியிருப்பதைக் கணலாம்,

திருமாலே ஒருசமயம் பூக்கொண்டு சிவபெருமானை மலர் தூவி வழிபட்டதாக ஒரு பாடல் நினைப்பூட்டுகிறது.

நீற்றினை நிறையப் பூசி நித்தலாயிரம் பூக்கொண்டு
ஏற்றுழி யொரு நாளொன்று குறையக் கண்ணிறைய விட்ட
ஆற்றலுக்காழி நல்கியவன் கொணர்ந்திழிச்சுங் கோயில்
வீற்றிருந்தளிப்பர் வீழிமிழலையுள் விகிர்தனுரே

திருமால் தான் பூசைக்காக வைத்திருந்த ஆயிரந் தாமரை மலர்களில் ஒன்று குறையத் தம்முடைய கண்ணையே ஒரு மலராக இட்டர்ச்சித்துச் சக்கரம் பெற்றுரென்பது வரலாறு. மார்க்கண்டேயர் பூசை செய்து காலனை விலக்கினுரென்று கூறுமிடத்தும் "தோடுலாமலர்கள் தூவி தொழுதெழுமார்க்கண்டேயன்" என்று கூறக் காண்கிறோம். ஏன் அவர்கள் அவ்வாறு வழிபட்டனர். "சிவ சிவ" என்று சிந்தித்தவண்ணம் வேண்டுவன பெற்றிருத்தல் கூடாதா? எம்பிரானுடைய அருள் பெறுவதற்கு மலர் கொண்டர்ச்சிப்பது ஒரு சிறந்த நெறியென்றன்றே திருமாலும் மார்க்கண்டரும் அவ்வாறு வழிபட்டனர். அன்பின் உருவாய கண்ணப்பர் வாய்க்கலசமாக நீரெடுத்து வந்து மலர்களைத் தலையில் சூடிக்கொணர்ந்து அபிஷேக அர்ச்சனைகள் செய்தாரெனில் நாம் அன்பால் நினைப்பது எவ்வண்ணம் அமையும்? " இறைவனை மனத்தினுல் நினைத்தால் போதாதா? அன்பால் துதித்தால் போதாதா? பூசனைகளெதற்கு என்றெல்லாம் வாய்விட்டு எப்படிச் சொல்ல முடியும். "உன்னை நினைய வல்லாரில்லை நீணிலத்தே" என்று திருஞான சம்பந்தர் கூறியிருப்பதைக் காணலாம். பூவொடு நீர்கொண்டு இறைவனை வழிபடுதல் சைவ சமயத்திற்கே ஒரு தனிப்பட்ட பண்பாகும். படங்களை வைத்துத் தெருவில் விற்கும் மாலைகளை வாங்கி அலங்கரித்து வழிபடுதல் சைவசமய நெறிக்குப் புறம்பானதே யென்பதையும் இங்குணர

வேண்டும். சிவபெருமானை சதாசிவ மூர்த்தியாகவோ அல்லது வேறு எந்த மூர்த்தியாகவோ விக்ரக மூலம் அமைத்து இல்லங்களில் புலர்வதன் முன் அபிஷேகம் செய்து அர்ச்சனை செய்து வழிபடும் நெறியே சைவநெறி யாகும். கோயில்களில் அவ்வாறு செய்து காட்டுகின்ற னர். அங்கு அப்படிப்பட்ட பூஜைகளைக் காண்பதோடு நில்லாமல் வீட்டிலும் அவ்வாறு செய்தல் வேண்டும். பள்ளியில் பாடம் எப்படிப் படிப்பதென்று கற்றுக் கொண்டு வீட்டில் அவ்வண்ணம் படித்துப் பழகாவிடில் எப்படி மாணவன் படிப்பில் தேறமாட்டானோ அதே போல் கோயிலுத்குச் சென்று பூஜைகளைக் கண்டுவிட்டு வந்தால் மட்டும் பத்தி முதிர்ந்து இறைவனுடைய அரு ளுக்குப் பாத்திரமாகி இன்ப அனுபவ மெய்தல் முடியாது.

"புலர்ந்தகால் பூவு நீருங் கொண்டடி போற்றமாட்டா
வலஞ் செய்து வாயினுல் வட்டணைப் பந்தர் செய்த
சிலந்தியை யரசனுக்கிச் சீர்மைகளருளவல்லார்
நலந்திகழ் சோலை சூழ்ந்த நனிபள்ளி யடிகளாரே"

என்ற பாடலை நோக்குமிடத்து, அடிபோற்றுதல் பூவும் நீரும் கொண்டுதான் செய்யவேண்டும். மனிதராய்ப் பிறந்து கைகால் ஊனமின்றியிருப்பவர்கள் வழிபடு முறை யில் பூவும் நீரும் கொண்டுதான் செய்தல் வேண்டும. அப் படி அல்லாமற் செய்வது வேறுவகைப் பிராணிகளுக் காகும் என்பது நன்கு விளங்குகிறது.

"அவ்வினைக் கிவ்வினையாம் என்று சொல்லு மஃதறிவீர்
உய்வினை நாடாதிருப்பதுந் தமக்கூனமன்றே
கைவினை செய்தெம்பிரான் கழல்போற்றுது நாமடியோம்
செய்வினை வந்தெம்மைத் திண்டப் பெருதிரு நீலகண்டம்"

என்று திருஞானசம்பந்தர் பாடியருளியுள்ளார். மலர் தூவி வழிபடுதலையே இங்கு கைவினையென்று குறிப்பிட் டிருப்பதைக் காணலாம். எனவே முன்செய்த நல்வினை தீவினைகளுக்கேற்ப இப்போது சுகதுக்கங்களை அனுபவிக் கிறோமென்றுணர்ந்தும் இனிவரக்கூடிய பிறவிகளில் நல்ல வினைகளை அனுபவிக்க இப்போது கைவினை செய்து எம்பிரான் கழல்களைப் போற்ற வேண்டும்.

எப்படி மலர்தூவிப் போற்றுதல் வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். "ஆக்கையால் பயனென் அரன் கோயில் வலம் வந்து பூக்கையால் அட்டிப் "போற்றி" யென்னாத இவ்வாக்கையால் பயனென்" என்று அப்பர் சுவாமிகள் திரு அங்கமாலையில் கூறியிருப்பதைக் காணலாம். இவ்வாறு எத்தனை சைவர்கள், தேவாரம் படித்தவர்கள் கோயிலுக்குச் செல்லும்போது மலர்களை எடுத்துச்சென்று தம் கைகளால் இறைவனுக்கு அர்ப்பணித்துப் "போற்றி" "போற்றி" யென்று வழிபடுகின்றனர். மூலவரை அருகிற் சென்று மலரிட முடியாது என்றாலும் சுற்றுப் பிராகாரத்திலுள்ள லிங்கங்களின்மேல் "போற்றி" போற்றி என்று கூறி மலரிடலாமல்லவா? போற்றி போற்றி என்று வாயாரச் சொல்லி கைகளினால் மலரிட்டு வணங்குவது நம்முடம்பிற்கே நன்மை பயக்குமென்று கூறுவதை நாம் மனத்தில் கொள்ள வேண்டாவா? அப்படிச் செய்யாதிருப்பது அப்பர்சுவாமிகளின் வாக்கை நாம் புறக்கணித்தது போலாகுமன்றோ?

மற்று திருஞான சம்பந்த சுவாமிகளும் பின் பாடலில் கூறுவதை நாம் கவனிக்க வேண்டும்.

செழுந்தண் மால்வரை யெடுத்த செறுவலி இராவணனலற
அழுந்த ஊன்றிய விரலான் "போற்றி" யென்பார்க்கல்ல
தருளான்
கொழுங்க னிசுமந் துந்திக் குளிர்புனல் நிவாமல்கு கரைமேல்
அழுந்துஞ் சோலை நெல்வாயில் அரத்துறை அடிகள்தம்அருளே

"போற்றி யென்பார்க்கல்ல தருளான்" என்று இரண்டு எதிர்மறைத் தொடர்களால் "போற்றிஎன்றிசைத்து வழிபடு மின்றியமையாத் தன்மையைமேற்படி பாடலில் திருஞான சம்பந்த சுவாமிகள் எடுத்துக் காட்டுவதைக் காணலாம்.

மேலும் இரண்டு பாடல்களில் திருஞான சம்பந்தர் இத்தொடரை நினைப்பூட்டுதலைக் காணலாம்.

பரக்கும் பெருமை இலங்கை யென்னும்
பதியிற் பொலிவாய

அரக்கர்க் கிறைவன் முடியுந் தோளும்
அணியார் விரல் தன்ளுல்
நெருக்கியடர்த்து நிமலா போற்றி
யென்று நின்றேத்த
இரக்கம் புரிந்தார் உமையாளோடும்
ஈங்கோய் மலேயாரே.

வேயுதிர் முத்தொடு மத்தயானே
மருப்பும் விராய்ப்
பாய்புனல் வந்தலேக்கும் பழங்
காவிரித் தென்கரை
நாயிறுந் திங்களுங் கூடி வந்தாடு
நாகேச்சரம்
மேயவன்றன் அடிபோற்றியென்பார்
விணேவிடுமே.

அடிபோற்றுவார் என்ளுது 'போற்றி' என்பார் என்று கூறியிருப்பதால் 'போற்றி' யென்பதை மந்திரமாகவே கருதிச் சொல்லியதாகக் காணப்படுகிறது.

பெரிய புராணத்துள்—

தெருளு மெய்க்கலே விளங்கவும் பாருளோர் சிந்தை
இருளும் நிங்கவும் எழுந்துசொன்மறை அளிப்பவர்தாம்
பொருளும் ஞானமும் போகமும் ' போற்றி " என்பார்க்கு
அருளும் அங்கணர் திரு அரத்துறையை வந்தணேந்தார்.

என்று பொருளும் ஞானமும் போகமும் "போற்றி" "போற்றி" என்று கூறி வழிபடுமவர்க்கு அருளப்படும் என்று பயனேக் குறிப்பிட்டுச் சேக்கிழார் பெருமான் பாடியருளியுள்ளார்கள்.

அப்படிப்பட்ட சொற்ருெடரின் பெருமையை உணர்ந்த அப்பர் பெருமான் நம்பொருட்டு போற்றித் தாண்டகங்கள் ஐந்து இயற்றியுள்ளார். போற்றித்திரு அகவலென்றே மாணிக்கவாசகப் பெருமானியற்றியருளியுள்ளார். இப்படிப்பட்ட திருமுறையில் காணப்படும் பொக்கிஷத்தை நாம் பயன்படுத்தி நன்மை பெருதிருப்பது நமக்கூனமன்ருே?

" பாடவேண்டு நான் போற்றி நின்னேயே
பாடிநைந்து நைந்துருகி நெக்கு நெக்கு

ஆடவேண்டு நான் போற்றி...
வீடு தந்தருளுபோற்றி நின் மெய்யர் மெய்யனே'' என்று மாணிக்கவாசகர் கூறுவதுபோல் சைவமக்கள் உணர்ச்சி பெறவேண்டாவா? சிவபெருமானுக்குகந்த சோமவாரங்களிலும் அவருக்குகந்த ''திருவாதிரை'' நட்சத்திரத்தன்றும் சிவாலயங்களில் இவ்வாறு சைவ மக்கள் அர்ச்சனை செய்து ஆக்கையால் பெறும் பயனைப் பெற வேண்டாவா?

தரிக்கிலேன்காயவாழ்க்கை என்று தொடங்கிப்பத்துப் பாடல்களில் போற்றி மந்திரம் அமைத்து மாணிக்கவாசகர் பாடியுள்ளார். அப்பதிகத்தையும் நாம் மலர் போற்றி வழிபடும் பூசனைக்குச் சேர்த்துக்கொள்ளலாம்.

ஐந்து திருத்தாண்டகங்கள், போற்றித் திருவகவல் திருச்சதகத்திலுள்ள தரிக்கிலேன்காய வாழ்க்கைப்பதிகம் ஆகிய ஏழையும் ஒவ்வொருநாளுக்கு ஒன்றாகச் சைவர்களினில்லங்கள் தோறும் போற்றி, மலர் தூவி வழிபடப்பயன் படுத்திக் கொள்ளலாம். இப்படியாக நம் சமயாசாரியர்கள் நமக்குத் தந்துள்ள பொக்கிஷத்தைப் பயன்படுத்தவில்லையாயின் அவைகளால் நாம் எப்படிப் பயனடைய முடியும்?

திருமயிலை வெள்ளீசுவரர் ஆலயத்தில் மாதந்தோறும் திருவாதிரை தினத்தன்று நடராஜமூர்த்திக்குச் சிறப்பு ஆராதனைகள் செய்து போற்றித் திருந்தாண்டகங்கள், போற்றித் திரு அகவல் முதலியவற்றை அன்பர் குழாம் ஓத வில்வதளங்களினால் அருச்சகர் ஒருவர் மலர் தூவ, மாலை 7 மணிமுதல் 9 மணிவரை வழிபாடு நடத்தப்படுகிறது. இவ்வாறு ஒவ்வொரு சிவாலயத்திலும் சோமவாரந் தோறும் திருவாதிரை தினத்தன்றும் வழிபாடு நடத்துதலுக்குச் சைவமக்கள் பெருந்திரளாகக்கூடி ஏற்பாடு செய்தல் வேண்டும். அப்படிச் செய்வதால்தான் நம்முடைய சமயாசாரியர்கள் கூறியுள்ள சைவ நன்னெறியை நாம் பலருக்கும் பயன்படுத்த முடியும். ''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'' என்று வெறும் வாழ்த்துக் கூறிவிட்டுச் செயல்முறையில் சைவ நெறியை நாம் கடைப்பிடித்து ஒழுகாமலிருப்பின் நம்முடைய வாழ்த்துப் பயன்படாதாகிவிடும்,

உ

சிவமயம்

பந்தமும் நித்தியமே

[புலவர்மணி—சித்தாந்த வித்தகர்

முரு. பழ. இரத்தினம் செட்டியார்]

நித்தியமாயும் வியாபகமாயும் உள்ள மலம் முத்திக் காலத்தும் உள்பொருளே என்றும், ஆனால் முத்தான்மாக்களைப் பந்திக்க முடியாத நிலையில் அது நிற்குமாதலால் முத்தியில் மலம் நீங்கும் எனச் சாத்திரங்கள் கூறுகின்றன என்றும், எனவே "மல நீக்கம்" என்பதற்கு "மலபந்த நீக்கம்" என்பதே பொருள் என்றும் யாம் எழுதியிருந்தோம். இக்கருத்து மெய்கண்ட நூற்களில் இனிது தெளிவுறுத்தப் பட்டிருந்தும், அன்பர் திரு. புலவர் பொன். சண்முகனாரவர்கள் இதனை மறுத்தெழுதினார்கள். அவர்கள் உடன்பட்டு எழுதுகின்ற அருளாசிரியரவர்களோ, "சித்தாந்தம்" மலர் 37. இதழ் 4-ல், திருவருளாகிய ஒளிமுன் ஆணவமான இருள் இருந்தும் இராததுபோல் அத்திருவருள் ஒளியுள் அடங்கும்" என எழுதி, 'இருந்தும்' என்பதன் மூலம் முத்தி நிலையிலும் மலம் இருக்கும் என்பதைப் புலப்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே பேரன்புமிக்க திரு. புலவர் பொன். சண்முகனார் அவர்கள் யாது காரணம் பற்றி எம்மை மறுத்தனர் என்பதை அறியக்கூடவில்லை. அதன்பின் அன்பர் திரு. சம்பந்தம் செட்டியார் அவர்கள் "மலம் உண்டு; தொடக்கில்லை" என விளக்கமான தலைப்புக் கொடுத்து, உமாபதி சிவம் அருளிச் செய்த "அழிந்திடும் பாசம் என்னில் நித்தம் என்றுரைத்தல் வேண்டா" என்னும் செய்யுளையும், சிவஞான பாடியத்தில் சிவஞான சுவாமிகள், "முத்தியில் மல சத்திக்குக் கேடே அன்றி மலத்திற்குக் கேடில்லை" எனச்

சிவாதித்தமணி தீபிகையுடையாரை மேற்கோள் காட்டித் தெளிவுற எழுதி யிருப்பதையும் எடுத்துக்கூறி எம்கருத்தை வலியுறுத்தி யிருக்கிறார்கள். அவர்களுக்கு எம் நன்றி உரியதாகுக.

உமாபதி சிவமும், சிவஞான சுவாமிகளும் தெள்ளத் தெளிய 'முத்தியில் மலத்திற்குக் கேடில்லை' என்பதன்மூலம் மலம் நித்தியம் என்பதை நிலைநாட்டி யிருக்க, அருணந்தி சிவம் மட்டும், 'பெத்தான்மாக்களிடத்தில் மலம் நிற்பதால் நித்தியம்' எனக் கூறியருளியிருப்பது முரணாகாதா? என்று அன்பர்கள் சிலர் எம்மைக் கேட்டிருக்கிறார்கள். எனவே இக்கட்டுரையில் அது குறித்துச் சிறிது கூற விரும்பு கின்றோம்.

முத்தி நிலையில் மலம் நிற்பதற்குச் சித்தாந்த சாத்திரங் களில் காட்டப்படும் உவமை, 'ஒளிமுன் இருளாகும்' ஒளி யின் முன் இருள் இல்லாமல் போவதில்லை, அதன் மறைப் பாற்றல் செயல்பட முடியாமற் போகும். இதனை 'ஒளியின் முன்னர் அழிந்திடும் இருளும் நாசம் அடைந்திடா மிடைந் திடாவே' என உமாபதிசிவம் கூறியருளியிருப்பதுகொண்டு அறியலாம்.

அருணந்தி சிவமும் சித்தியார் ஏழாம் சூத்திரம் முதற் பாட்டில், 'முனைத்திடாது அசத்துச் சத்தின் முன் இருள் இரவி முன்போல்' எனக் கூறியருளுவதால், ஒளிமுன் இருள் முனைத்து நிற்காதே அன்றி இல்லாமற் போகாது என்பதே அவர்க்கும் கருத்து என்பது தெளிவு.

சித்தியார் பதினொன்றும், சூத்திரம் 5 ஆம் செய்யுளில் 'அருக்கன் புகுத இருள் போமடியிற் பொருந்த மலம் போமே' எனக் கூறுவதால், கதிரோன்முன் இருள் இருந் தும் முனைந்து நிற்காமைபோல முத்தி நிலையில் மலம் இருந் தும் முனைந்து நிற்காது என்பதே. 'மலம் போமே' என்பு

தற்கு அவர் கொள்ளும் பொருள் என்பது இனிது பெறப் படும்.

மேற்கண்ட சூத்திரம், 4 ஆம் செய்யுள் பின் வருமாறு கூறுகிறது :—

''தெரிவரிய மெய்ஞ்ஞானம் சேர்ந்தவாறே
சிவம் பிரகாசிக்கும் இங்கே சிவன் முத்தனுகும்
உரிய மலம் ஔடதத்தால் தடுப்புண்ட விடமும்
ஒள்ளொளியின் ஒளிமுன்னர் இருளும் தேற்றின்
வருபரல்சேர் நீர்மருவு கலங்கலும் போலாகி
மாயாதே தன் சத்தி மாய்ந்து காயம்
திரியும் அளவும் உளதாய்ப் பின்பு காயம்
சேராத வகைதானும் தேயும் அன்றே''

இச்செய்யுள் எதிர்நிரல் நிறைப் பொருட்கோள் முறையில் அமைந்திருக்கிறது. 'மெய்ஞ்ஞானம் சேரப் பெற்ருேரிடத்தே மலம் தேற்றாங் கொட்டையால் தேற்றப்பட்ட நீரில் அடங்கியிருக்கும் கலங்கல்போல நிற்கும். சிவம் பிரகாசித்தோர் இடத்தே ஒளிமுன் இருள்போல அது நிற்கும்; சிவன் முத்தரிடத்தே மருந்தினல் தடைப்பட்ட நஞ்சுபோல அஃது இருக்கும். எனவே மூவரிடத்தும் மலம் தன் ஆற்றல் கெட்டாலும் தான் கெடாமல் நிற்கும்'' என அருணந்தி சிவம் இச்செய்யுளில் நமக்கு அறிவுறுத்துகிருர்.

மெய்ஞ்ஞானம் சேரப்பெற்ருேர் என்றும் சிவன் முத்தர் என்றும் தனித்தனியே பிரித்து ஓதுவதால், நடுநின்ற 'சிவம் பிரகாசித்தோர்' பரமுத்தி நிலேக்கு எடுத்துக் காட்டாவர் என்பது தானே போதரும். அவரிடத்தே மலம் நிற்பதற்கு இச் செய்யுளில காட்டப்படும் உவமை, 'ஒளிமுன் இருளாதலால்' அருணந்தி சிவம் முன்னர் நமக்கு விளக்கி யிருப்பது கொண்டு, பரமுத்தி நிலேயினும் மலம் முனைத்து நிற்காதே அன்றி இல்லாமற் போகாது என நாம் நன்கு அறிந்து கொள்ளலாம்,

'காயம் திரியும் அளவும் உளதாய்ப் பின்பு காயம் சேராதவகை தானும் தேயும் அன்றே" என்பதற்குப் பொருள், உடம்பு நீங்கிய பரமுத்தி நிலையில் மலம் இல்லாமற்போகும் என்பதன்று. பரமுத்தி நிலைக்கு "ஒளிமுன் இருள்" உவமை இச்செய்யுளிலேயே காட்டப்படுவதால் அவ்வுவமைக்கு மாறாகப் பரமுத்தி நிலையில் மலம் இல்லாமற் போகும் எனக் கூறுவது பொருந்தாததாக முடியும். மலம் சத்தி கெட்டுப் பரமுத்தி நிலையிலும் நிற்கும்; சீவன் முத்தி நிலையிலும் நிற்கும். சத்திகெட்ட மலத்திற்கு எச்செயலும் இருக்க முடியாது. எனவே இது பரமுத்தி நிலைக்குப் பொருந்தும். ஆனால் சீவன் முத்தி நிலையில் உடம்பு இருப்பதால், அஃது இருக்கும் வரைக்கும் செயல் இருக்கவே செய்யும். ஆகவே மலம் சத்திகெட்டு நிற்கும் என்பது சீவன் முத்தர்க்குப் பொருந்காது; அவரிடத்தே மலத்திற்குச் சத்தி உண்டு என்று சொன்னால், பின் அது பிறவிக்கு ஏதுவாக முடியும். இதனால் அவரிடத்தே மலம் சத்தியுடன் நிற்கும் என்றும் சொல்ல முடியவில்லை; சத்திகெட்டு நிற்கும் என்றும் சொல்ல முடியவில்லை. அப்படியானால் எங்ஙனம் சொல்வது? சீவன் முத்தரிடத்தே மலம் சத்திகெட்டாலும் வாசனை மாத்திரையாய் நிற்கும்; உடம்பு நீங்கிய பின் வேறு பிறவிக்கு ஏதுவில்லாமல் அவ்வாசனைகளும் கழிந்தொழியும் என்றே கூறவேண்டும். இதனையே "காயம் திரியும் அளவும் உளதாய்" என்னும் அடி உணர்த்துகிறது. "மலம்போமே" என 5-ஆம் செய்யுளில் கூறியதற்கு "மலம் இல்லாமற்போகும்" எனக் கொள்ளாமல், "அருக்கன் முன் இருள்" என்னும் உவமையால் முனைத்து நிற்காமையே பொருள் எனக் கொண்டதுபோல், இச்செய்யுளில் வரும் "ஒளிமுன் இருள்" என்னும் உவமையால், "தானும் தேயும் அன்றே" என்பதற்கு இல்லாமற்போகும் எனப் பொருள் கொள்ளாமல் வாசனையும் இல்லாமல் சத்திகெட்டு நிற்கும் எனப் பொருள் கொள்ள வேண்டும்.

சித்தியார் சூத்திரம். 10. செய்யுள் 6-ல் "எல்லா மலங்களும் பின் காயமொடு மாயும் அன்றே" என்று

கூறப்பட்டுள்ளது. இதற்கு, "எல்லா மலங்களும் உடம்பு நீங்குவதோடு ஒழிந்து போகும்" என்றுதானே பொருள் கொள்ள வேண்டும்? சிவஞான சுவாமிகள் அங்ஙனம் பொருள் கொள்ளவில்லை. "மலங்கள்" என்பதற்கு "மல வாதனைகள்" எனப் பொருள்கொண்டு, "ஏனை மல வாதனைகளும் அவ்வுடம்பு மாயுங் காலத்து வேறொரு பற்றின்மையான் அதனோடு மாய்ந்தொழியும்" என உரை செய்திருக்கிறார். சித்தாந்தத்தில் பொருள்கோள் முறைகள் சில உண்டு. "சூன்யம்" என்பதற்கு "இன்மை" என்பது சித்தாந்தப் பொருள் அன்று. "விளங்காமை" என்பதே சித்தாந்தப் பொருளாகும். "அழிதல்" என்பதற்கு "இல்லாது ஒழிதல்" சித்தாந்தப் பொருளாகாது. காரிய நிலைமாறிக் காரண நிலைக்கு வருவதே, "அழிதல்" என்று சொல்லப் படும். எனவே இம்முறைகளையும் மரபுகளையும் அறிந்தே பொருள் செய்ய வேண்டும். "தானும் தேயும் அன்றே" என்பதற்கு வாசனையும் இல்லாமல் மலம் சத்திகெட்டு நிற்கும் என்பதே சித்தாந்தப் பொருள்கோள்முறையாகும்.

இதுகாறும் கூறியவாற்றால் அருணந்தி சிவாசாரியர்க்கும் உமாபதி சிவம் கூறியவண்ணம் ஒளிமுன் இருள்போல் முத்தி நிலையிலும் மலம் இல்லாமற் போகாமல் சத்தி கெட்டு நிற்கும் என்பதே கருத்தாதல் தெளிவாகப் புலனாகும். ஆகவே, பெத்தான்மாக்களிடத்தில் மலம் நிற்பதால் "நித்தியம்" என அவர் கூறுவதற்கு, இதற்கு ஏற்றவாறேபொருள் செய்ய வேண்டும் என்பதைக் கூற வேண்டுவதில்லை. இனி அச்செய்யுளை ஆராய்வோம் :—

"நெல்லினுக்குத் தவிடுஉமிகள் அநாதியாயே
நெல்லைவிட்டு நீங்கும்வகை நின்றநிலை நிகழ்த்திர்
சொல்லியிடில் துகளற்ற அரிசியின் பால்இல்லை
தொக்கிருந்து மற்றொருநெல் தோன்றிடாவாம்
மெல்ல இவைவிடும் அறவே இவைபோல அணுவை
மேவுமலம் உடல்கன்மம் அநாதிவிட்டே நீங்கும்

நல்லசிவ முத்தியின்கண் பெத்தான்மாவை
நணுகிநிற்கும் ஆதலால் நாசமும் இன்றுமே!''

இரத குளிகை பரிசித்த செம்பிலும் களிம்பு தொக்கிருக்கும் என்பாரை நோக்கி வேறு உவமை கூறுவதன் மூலம் அவர்களுக்கு உணர்த்த இச் செய்யுள் எழுந்ததென்றாலும் ஒளிமுன் இருள் உவமையை மறுப்பார் யாரும் இல்லாமையின், அவ்வுவமைக்கு மாறுகாதவாறே இதற்குப் பொருள் கூற வேண்டும்.

"நெல்லினுக்குள் தவிடு உமிகள்'' என்னும் உவமை சித்தாந்த நூற்களில் எதற்குக் கூறப்படுகிறது? சித்தியாரையே நோக்குவோம். 2 ஆம் சூத்திரம் 86 ஆம் செய்யுளில், "மும்மலம் நெல்லினுக்கு முளையொடு தவிடு உமி போல் மம்மர் செய்து அணுவின் உண்மை வடிவினை மறைத்து நின்று'' எனக் கூறப்பட்டுள்ளது. "மம்மர்செய்து, மறைத்து நின்று'' என்றால், மயக்கத்திற்கு ஏதுவாகப் பந்தித்து நின்று'' என்று பொருள். எனவே இவ்வுவமை மலபந்தத்தைக் குறிக்க எழுந்தது தெளிவு. "இங்கே, முளை தவிடு உமிகள் பந்தத்திற்கும், காரணமாதல் மாத்திரைக்கும் உவமையாயின்'' எனச் சிவஞான சுவாமிகள் கூறுவதால் இதற்குமேல் இவ்வுவமையை விரித்துப் பொருள் கொள்ளக் கூடாது என அறிதல் வேண்டும்.

''தவிடு, உமிகள் அரிசியை விட்டுப் பிரிந்து வேறு இடத்தில் கிடக்கும்; அதுபோல மலம் உயிரை விட்டுப் பிரிந்து வேறு இடத்தில் இருக்கும்'' என்ற அளவுக்கு இவ்வுவமையை விரித்தல் பிழையாகும். ஆன்மாவும், மலமும் வியாபகப் பொருட்கள்; அரிசி, தவிடு, உமி ஆகியவை பலவாயும், சமமாயும் இருப்பவையாதலால் அவை நித்தியப் பொருட்களும் அல்ல; உவமைகள் யாவும் ஒருபுடை உவமைகளே; எனவே சிவஞான சுவாமிகள் கூறுவதுபோல, ''தவிடு. உமி,'' உவமை பந்த மாத்திரைக்கே கொண்டு,

அவை "பிடிப்பு அறுதலை"ப் பந்த நீக்க மாத்திரைக்குக் கொள்ள வேண்டும். அதற்கு மேல் இவ்வுவமை செல்லாது.

மேற்காட்டிய உவமை பந்த மாத்திரைக்கே செல்லுபடியாகுமாதலால், இச்செய்யுள் பந்த நீக்கத்தை உணர்த்த எழுந்தது என்பது தேற்றம்.

சித்தியார் 10 ஆம் சூத்திரம். 6 ஆம் செய்யுளில் "மலங்கள்" என்பது, "மலவாதனைகளை"க் குறித்தமை போலப் பந்த மாத்திரைக்கே உவமையாக நிற்கும் "தவிடு உமிகள்" வரும் இச்செய்யுளில் கூறப்படும் மலமாயாகன்மங்களின் நீக்கம், மலமாயா கன்மங்களின் பந்த நீக்கத்தையே குறிக்கும் என அறிதல் வேண்டும். ஆகவே, "அநாதி அணுவை மேவும் மலம் உடல் கன்மம் நல்ல சிவ முத்தியின்கண் விட்டே நீங்கும்" என்பதற்கு, "அநாதியே உயிர்களோடு சகசமாய் நின்ற மும்மலங்களும் முத்தியிலைக் கண் விண்டொழியும்" எனச் சிவஞான சுவாமிகள் எழுதி யிருக்கும்உரையைக் கூர்ந்துநோக்கினுல், அவர் "மும்மலங்களும்" எனக் கூறுவது, 'மும்மல பந்தத்தையே' குறிக்கும் என்பது புலனுகும். அவரே "மலங்கள்" என்பதற்கு "மலவாதனைகள் எனப் பொருள் கொண்டிருக்கிருர். அதுபோல இங்கே அவர் "மும்மலங்கள்" எனக் கூறியிருப்பதற்கு "மும்மல பந்தங்கள்" எனப்பொருள் கொள்வது தவருகாது. மேலும் சித்தியார் 10 ஆம் சூத்திரம் முகற்பாட்டில் "அரன் பணியில் நின்றிடவும் அகலும் குற்றம்" என்பதற்கு, இறை பணியில் நிற்கப்பெறின் வினைச் சஞ்சிதவினையும், மாயையும் ஆணவமுமாகிய குற்றங்கள் மூன்றும் சிவனைப் பந்திக்க மாட்டாவாய் விண்டொழியும்" எனச் சுவாமிகள் உரை எழுதியிருக்கிருர். 'அகலும் குற்றம்" என்ருல் "மலங்கள் நீங்கும்" என்று பொருள். மலங்கள் நீங்கும் என்ருலே அவை பந்திக்காமல் போகும் என்பது இனிது புலனுகும். அங்ஙனமிருந்தும் "பந்திக்கமாட்டாவாய் நீங்கும் என விரித்துப் பொருள் எழுதக் காரணம் என்ன?

"மலங்கள் நீங்கும்" என்பது மலபந்தங்கள் நீங்கும்" என்னும் பொருளிலேயே சித்தாந்த நூற்களில் வரும் என உணர்த்துவதற்கே அவர் அங்ஙனம் எழுதியுள்ளார். ஆன்மா முத்தியில் இறைவனைச் சார்ந்து முழுவியாபகம் எய்துகிறது. இதனை, "அவனை அகன்று எங்கு இன்றும் ஆங்கு அவனும் எங்கும் இவனை ஒழித்து உண்டாதல் இல்" என்னும் திருவருட் பயனால் உணரலாம். எனவே வியாபகப் பொருட்குப் பொருள் அளவில் நீக்கம் சொல்ல எவ்வாற்றானும் முடியாது. இதனாலேயே சிவஞான சுவாமிகள் "வியாபகப் பொருட்குக் காட்சி விசேடமே நீக்கமாகலின்" எனக் கூறியுள்ளார். வியாபகப்பொருட்குக் காட்சி விசேட மாத்திரையே நீக்கம் சொல்லும் சிவஞான சுவாமிகளுக்கும், முத்தி நிலையில், "அருக்கன்முன் இருள்போல் மலம் போம்" எனக் கூறும் அருணந்தி சிவத்திற்கும் உயிரை விட்டுப் பொருள் அளவில் மலங்கள் நீங்கும் என்பது கருத்தாக அறவே இருக்க முடியாதாதலால், ஈண்டு "மும்மலங்களும் முத்தி நிலைக்கண் விண்டொழியும்." என அவர்கள் கூறுவதும் மலபந்தத்தையே குறிக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. சித்தாந்தப் பொருள்கோள் முறையை உணர்ந்தோமேயானால் இங்ஙனம் கூறுவது வலிந்து பொருள் கொள்வதாகாது என்பதும் தெளிவாகும். "மல நீக்கம்" என்பது பொருள் அளவில் உயிரைவிட்டு மலம் நீங்கும் என மயங்கிப் பொருள்கொள்ள இடம் தருவதால், வியாபகப் பொருளாகிய ஆன்மா உணர்ச்சி விசேடத்தால் மலத்தின் கண் உள்ள விருப்பினை நீக்கி இறைவனைப்பற்றி நிற்றலையே அது குறிக்கும்என்பதை உணர்த்தவே "மல நீக்கம்" என்று சொல்லாமல் "மலபந்த நீக்கம்" எனக் கூறுகிறோம். இந்நிலையில்மலத்தின் மறைப்பாற்றல் செல்லுபடியாகாதாதலால், மலம் சத்திகெட்டு நிற்கும் என்றும் சொல்லுகிறோம். இவ் வேறுபாட்டை நன்கு அறிந்துகொள்ளவேண்டும்.

"நெல்லினுக்குத் தவிடு உமிகள் பந்தமாயிருந்தும் அப் பந்தம் அறுதல் போல, ஆன்மாக்களுக்குப் பல, மாயா கன்

மங்கள் பந்தமாயிருந்தும், முத்திநிலையில் அப்பந்தங்கள் அறவே நீங்கும். எனினும் பெத்தான்மாக்களிடத்தில் இம் மலபந்தங்கள் காணப்படுதலால், இப்பந்தங்களுக்கும் என் றும் அழிவுல்லை; அவ்வ 'நித்தியமே' என்பது இச் செய்யு ளுக்குள்ள பொருளாகும்.

"மும்மலங்களும் நீங்கும்" என்பதற்கு "மும்மல பந் தங்களும் நீங்கும்" எனப் பொருள் கொண்டது போலப் "பெத்தான்மாக்களிடத்தில் மலங்கள் காணப்படுதலால் அவை நித்தியம்" என்பதற்குப் "பெத்தான்மாக்களிடத் தில் அம்மலபந்தங்கள் காணப்படுதலால் அப்பந்தங்களும் நித்தியமே" எனப் பொருள்கொள்ளுதல் ஏற்புடைத்தே என்பதைக் கூறவேண்டுவதில்லை.

"வியாபகப் பொருளாகிய மலம் முத்தியில் இல்லை, ஆனால் பெத்தரிடத்தில் அது நிற்பதால் நித்தியம்" என்பது அளவை நூன்முறைக்கு முரணாகும். ஆகவே அது முத்தி யிலும் அருக்கன் முன் இருள்போல் சத்தி கெட்டு நிற்கும் எனச் சொல்வதே அதன் வியாபகத் தன்மைக்கு இழுக்கில் லாமல் நித்தியத் தன்மையை நிலைநாட்டுவதாக இருக்கும். இதனை உணர்த்தவே "சிவஞானசித்தியார் ஆராய்ச்சி" என் னும் நூலில் சித்தாந்தப் பேராசிரியர் திரு. ந. சிவகுருநாத பிள்ளை அவர்கள், "ஈண்டு மலநீக்கமாவது மலத்தினது மறைக்கும் ஆற்றல் (சத்தி) பற்றற ஒழுவதாகும். முத்தி நிலையில் ஆணவமலம் மறைக்கும் ஆற்றல் சிறிதுமின்றிச் செயலற்றுக் கிடக்கும். அதனால் மலத்தின் நித்தியத்துக்கும் வியாபகத்துக்கும் கேடில்லையாம்" என எழுதியுள்ளார்கள்.

மலபந்தம் நித்தியம் என்பதை நிலை நாட்ட இங்ஙனம் சொல்ல முடியாது. ஏனெனில் முத்தரிடத்தில் மலபந்தம் அறவே இல்லை. எனவே பெத்தரிடத்தில் அது காணப்படு தலால் நித்தியம் என்றுதான் கூறவேண்டும். மலம் ஒரு பொருளாதலால் அதற்கு நீக்கம் சொன்னால் வியாபகத் தன் மைக்கு இழுக்கு நேரும்; வியாபகத் தன்மைக்கு இழுக்கு

என்றால் அப்பொருளின் நித்தியத் தன்மைக்கும் இழுக்கு என்பது தானே போதரும். ஆனால் பந்தம் பொருள் அன்று. ஆகவே அதன் வியாபகத் தன்மைக்கு இழுக்கு நேர்வது பற்றிக் குறை ஒன்றும் இல்லை. பொருளாயிருந்தால்தான் வியாபகத்தன்மை கெட்டால் நித்தியத்துவமும் கெடும். பந்தம் பொருளன்றாதலால், அதன் வியாபகத்தன்மை கெட வேண்டிய அவசியம் இல்லை. இதனாலேயே அருணந்திசிவம், "முத்தரிடத்தில் மலபந்தம் இல்லை. ஆனால் பெத்தரிடத்தில் காணப்படுதலால் அம்மலபந்தமும் நித்தியமாம்" என இச் செய்யுளில் கூறியருளியிருக்கிறார்.

"தெரியவரிய மெய்ஞ்ஞானம் சேர்ந்தவாறே" என்னும் செய்யுளில் மெய்ஞ்ஞானம் சேரப்பெற்றோர், சிவம்பிரகாசித்தோர், சீவன்முத்தர் ஆகிய மூவரிடத்திலும் மலம் சத்தி கெட்டு நிற்கும் எனக் கூறுவதன்மூலம், பரமுத்தி, சீவன் முத்தி இரண்டிலும் மலம் நித்தியம் என்பதை முன்னரே அருணந்திசிவம் நிலைநாட்டியிருக்கிறார். எனவே "நெல்லினுக்குத் தவிடு உமிகள்" என்னும் இச்செய்யுளில் மலபந்தம் நித்தியம் என்பதை நிலைநாட்டுகிறார் என அறிதல்வேண்டும்.

சைவ சித்தாந்தத்தில் மலம் நித்தியம் என்பதை மட்டும் நிலைநாட்டினால் போதாது; மலபந்தமும் நித்தியம் என்பதை நிலைநாட்டியாகவேண்டும். நித்தியமாக இருக்கலாம். ஆனால் முத்திக் காலத்தில் இல்லாமற்போகும். பந்தம் அநித்தியம் என்று கொண்டால், என்றாவது ஒருநாள் அப் பந்தம் யாரிடத்தும் இல்லாமற் போகும் என்று கருத நேரிடும். எனவே எல்லா ஆன்மாக்களும் ஒரு காலத்தில் முத்தியடைந்துவிடும் என்றும் அப்புறம் இறைவன் படைத்தல், காத்தல் முதலிய தொழில்களைச்செய்து உயிர்களைப் பிறவிக்குக் கொண்டு வரவேண்டிய அவசியமில்லாமற் போகும் என்றும் கொள்ளவேண்டியது வரும். இதனால் இறைவனின் ஐந்தொழில்களும் அநித்தியமாகிவிடும். "இறைவனின் ஐந்தொழில்களும் நித்தியம்" என்பது சைவ சித்தாந்தக்கொள்கையாகும். எனவே, "பந்தம் நித்தியம்" என்பதை நிலை

நாட்டினால்தான் இறைவனின் ஐந்தொழில்களும் நித்தியம் என்பதை நிலைநாட்ட முடியும்.

ஆன்மாக்கள் எண்ணிலவாதலால், எத்தனை ஆன்மாக்கள் முத்தியடைந்தாலும், முத்தியடையவேண்டிய ஆன்மாக்களும் எண்ணிலவாகவே இருக்கும். இதனால் இறைவனின் ஐந்தொழிற்கும் முடிவில்லை என்று சொல்லுகிறோம். முத்தியடைய வேண்டிய ஆன்மாக்கள் என்றும் உண்டு என்பதையே "பந்தம் நித்தியம்" என்னும் கருத்து உணர்த்துகிறது. மலம் சத்தி கெட்டு நிற்கும் என்பதால் அது மட்டும் நித்தியம் என்ற அளவோடு நாம் நின்று விட்டால் இறைவனின் ஐந்தொழில்களும் நித்தியம் என்பதற்குரிய ஏது ஒன்றும் பெறப்படாது. ஆனால் முத்தான்மாக்களை விட்டு நீங்கினாலும் பெத்தான்மாக்களிடத்தில் பந்தம் என்றும் இருப்பதால் அந்தப்பந்தமும் நித்தியம் என்று கூறினால், இறைவனின் ஐந்தொழில்களும் நித்தியம் என்பது தானே பெறப்படும்.

"முத்தான்மாக்களிடத்தில் மலம் இல்லாவிட்டாலும் பெத்தான்மாக்களிடத்தில் அது நிற்பதால் நித்தியம்" என்று கூறுவதன் மூலமும் இறைவனின் ஐந்தொழில்களும் நித்தியம் என்பது பெறப்படும் அன்றோ? ஆகவே மலம் நித்தியம் என்பதோடு அமையாமல் மல பந்தமும் நித்தியம் என்று ஏன்கொள்ளவேண்டும்? எனக் கேட்கலாம். முத்தான்மாக்களை விட்டு மலம் நீங்கிப்பெத்தான்மாக்களிடத்தில் நிற்கும் என்றால், வர வர அதன் வியாபகம் சுருங்கி என்றாவது ஒருநாள் இல்லாமற்போகும் என்பதுதான் கொள்ள நேரிடும். ஆகவே இங்ஙனம் சொல்லாமல் வியாபக இலக்கணத்திற்குட்படாத—பொருளாக இல்லாத—பந்தத்தை நித்தியம் என்று சொல்லி, அதன்மூலம் இறைவனின் ஐந்தொழில்களும் நித்தியம் என்பதை உய்த்துணரச் செய்கிறோம்.

ஏனைச் சித்தாந்த நூல்கள் மலம் நித்தியம் என்பதை மட்டும்தான் நிலைநாட்டியுள்ளன. சித்தியார் அதனோடு

அமையாது, பந்தமும் நித்தியம் என்பதை இச்செய்யுள் மூலம் நிலைநாட்டியுள்ளது. முன் நாம் எழுதிய கட்டுரையில் இச்செய்யுளுக்குத் தூலாருந்ததி நியாயமாகப் பொருள் கொள்ளலாம் எனக் குறிப்பிட்டிருந்தோம். ஆனல் ஆழ்ந்து சிந்தித்தபொழுது, இவ்வாறு பொருள்கொள்வதே சித்தாந்தப் பொருள்கோள் முறைமைக்கு ஏற்றது என்பது புலனயிற்று. சிவஞானசுவாமிகள் உரையையொட்டியே நாம்பொருள் கூறியிருப்பதால் சைவ அறிஞர் உலகம் இதனை ஏற்கும் என்றே நம்புகிறோம்.

சைவ சித்தாந்தம் நித்திய பெத்தர்கள் உண்டு என்பதை ஒப்புக்கொள்வதில்லை. ஒவ்வோர் ஆன்மாவும் முத்தி அடையவே செய்யும் என்பது சைவ சித்தாந்தக் கொள்கையாகும். இதனுல்தான் நித்திய பெத்தர்கள் உண்டு என்று சொல்லாமல், முத்தியடைய வேண்டிய ஆன்மாக்கள் என்றும் உண்டு என்றும், பந்தம் நித்தியம் என்றும் சொல்கிறோம்.

சித்தாந்த அறிஞர்கள் "மலம் சத்தி கெட்டு நிற்பதால் நித்தியம்" என்றும் "மலம் பெத்தரிடத்தில் நிற்பதால் நித்தியம்" என்றும் ஒன்றுக்கு ஒன்று முரணுக எழுதி மயக்கத்தை விளைவிக்காமல், முத்தரிடத்தில் சத்தி கெட்டு நிற்பதால் மலம் நித்தியம் என்றும்,பெத்தரிடத்தில் மலபந்தம் இருப்பதால் பந்தமும் நித்தியம் என்றும் சிக்கறுத்து எழுதுதல் நலம் பயக்கும்.

"சத்தி கெடுதல்" என்றல் என்ன என்பதையும் ஈண்டு விளக்கி இக்கட்டுரையை முடிக்கின்றோம். சத்தி கெட்டுச் சத்திமான் இருப்பதென்பது பொருந்தாது. சிவஞான சுவாமிகள், "வியாபகமாதலின் அகனை நீங்குவதாவது நெருப்பினது சுடுதற் சக்தியை நிகழவொட்டாது தடுக்கும் குளிரைப்போல மலத்தினது மறைத்தற் சக்தியை ஆன்மாவின் கிரியா சத்தியின் கண் நிகழவொட்டாது தடுத்தலாம்" எனச்சிவஞான பாடியத்தில், "கலா தத்துவம்" பற்றிஎழுதும் போது குறிப்பிட்டு, "ஈண்டு தடுத்தலாவது காரிய நிகழ்ச்சியிற் செல்லுமன்றி "நின்ருங்கு நிற்கச் செய்தல்" எனக்

"காரகசத்தியுண்மை" பற்றிஎழுதும் போதுவிளக்கியுள்ளார். ஆகவே "சத்திகெட்டு நிற்றல்" என்பது மலம்காரிய நிகழ்ச்சியில் செல்லாமல் நின்றாங்கு நிற்றல் என அறிதல் வேண்டும். இதனால் மலத்திற்கோ, அதன் ஆற்றலுக்கோ அழிவில்லை என்பதும் இறைவனைச் சார்ந்த உயிரினிடத்தில் அதன் ஆற்றல் பலிக்காமல் நின்றாங்கு நிற்கிறதுஎன்பதும் பெறப்படும். இங்ஙனம் உமாபதி சிவாசாரியார், அருணந்தி சிவாசாரியார், சிவஞானசுவாமிகள் ஆகியோர் கூறியனவற்றிற்குச் சிக்கறுத்துப் பொருள் தெளிவுசெய்து எழுதி வந்தால், "சித்தாந்தம்" கற்போருக்குக் குழப்பம் நேராமல் இருக்கும் என்பதைத்தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

பிற செய்திகள்

தவத்திரு. சம்பந்த சரணாலயத் தம்பிரான் சுவாமிகளின் (சிவக்கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியார் என்று பூர்வாசிரமத்தில் வழங்கப்பட்டவர்கள்) நான்காம் ஆண்டு குருபூசை விழா 9—2—65ல் கோயம்புத்தூரை யடுத்துள்ள திருப்பேரூரில் அவர்கள் சமாதி நிலையத்தில் நடந்தது. காலை 10 மணிக்கு அங்கு தேவார இன்னிசையுடன் தொடங்கி அபிடேகம் வழிபாடு முதலியன சிறப்புற நிகழ்ந்தன. பேரூர் சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி முதல்வர் தவத்திரு. இராமசாமி அடிகளார் தலைமையில் திருமுறைச் செல்வர் வித்துவான் S, அருணாசலம் பிள்ளை, வடவழி வீரப்ப கவுண்டர் புலவர் பட்டியப்பனார் இலக்கண நிறைகடல் பண்டித அ. கந்தசாமிப்பிள்ளை ஆகியோர் சுவாமிகள் தமிழ்மொழிக்கும் சைவ சமயத்துக்கும் ஆற்றிய பெருந்தொண்டைப் பாராட்டிப் பேசினர். பெரிய புராணத்துக்குப் பேருரை வகுத்தது அவர்கள் நமக்கு அளித்த அழியாத செல்வம் என்றும், அதை இளைஞர்கள் அனுபவிக்க வேண்டும் என்றும் விளக்கினர். நமது சமாஜத் தலைவர் திரு. கோ, மு. முத்துசாமி பிள்ளை I.A.S. (Rtd) சமாஜப் பேரன்பர்கள் இராவ் பகதூர் வ. சு. செங்கல்வராய பிள்ளை M.A., சைவ ஞாயிறு திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் B. A. B. L, திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை B.A L.T., ஆகியோரும் இன்னும் பல அன்பர்களும் அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்திகள் வாசிக்கப்பட்டன. மாகேசுரபூசைக்குப் பின்பு விழா இனிது முடிவுற்றது.

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி

(ஆசிரியர்)

தமிழ்நாட்டில் சென்ற ஜனவரி 25-ஆம் தேதிமுதல் இரண்டு வாரம் நடைபெற்ற இந்தி எதிர்ப்புக்கிளர்ச்சியை எண்ணி அறிவுடைய ஒவ்வொரு தமிழ் மகனும் தலை குனியவேண்டும். இந்தி மட்டுமே இந்திய ஆட்சிமொழியாக இருக்கவேண்டுமென்று மத்திய அரசியல் பொறுப்புள்ள சில இந்தி வாதிகள் திட்டமிட்டுக் காரியம் நடத்த முற்பட்டார்கள்; சட்டம் அதற்கு இடந்தருகிறது. இதை 26-ஆம் தேதிமுதல் எதிர்க்கவேண்டுமென்று தமிழ் நாட்டிலுள்ள சில தலைவர்கள் திட்டமிட்டு, இதற்கெனப் போர் நடத்த வேண்டுமென்று மாணுக்கரைத் தூண்டி விட்டார்கள். மாணுக்கர் பள்ளிக்குச் செல்லாமல் போர் செய்வது என்று முன்வந்தார்கள். அவர்களோடு நாட்டிலுள்ள சுயநலமிகள், தீயவர்கள், அரசியல்வாழ்வில் தோல்வியுற்றவர்கள், சமய விரோதிகள் அரசைக் கவிழ்க்க எண்ணிய சதிகாரர்கள், கறுப்புப் பணம் சேர்த்தவர்கள் முதலான பலரும் சேர்ந்துகொண்டார்கள். இதன் பலனுகத் தேசமெங்கும் கொள்ளை, தீயிடல், கொலை முதலான எல்லாத்தீச் செயல்களும் மிக மிக மலிந்தன. சட்டத்துக்கு அஞ்சவேண்டும், கீழ்ப்படிய வேண்டும் என்ற உணர்ச்சி மறைந்துவிட்டது. ரயில், பஸ், அரசியல் அலுவலகம் முதலியவற்றைத் தீயிட்டமையால் நாட்டுக்கும், தனிப்பட்டவர்களுக்கும் பல கோடி ரூபாய் நஷ்டமாயிற்று. மாணுக்கர் பெயரைச் சொல்லிச் சில இடங்களில் வெறும் காலிகள் பாடசாலைகளையும் சமய ஸ்தாபனங்களையும் தீயிட்டுக் கொளுத்திவிட்டார்கள். இதுவரையில் தமிழ் நாடு என்றுமே கண்டிராத அளவு அழிவும் அராஜகமும் தாண்டவமாடிற்று.

இத்தனைக்கும் காரணம், இந்தியை அரசியல் மொழியாக ஆக்கினுல் தமிழ் மக்கள் எதிர்காலம் பொது வாழ்

வில் இந்திபேசும் மக்களோடு சமமான அந்தஸ்தைப் போட்டிமூலம் அடைய முடியாதென்ற அச்சம். இரண்டாவது, உலக அரங்கில் விஞ்ஞானம் போன்ற எல்லா அறிவுத்துறைகளிலும் தாழ்ந்த நிலையிலுள்ள இந்திய நாடு அறிவுபெற்று வளர்ந்து ஓங்கி வருவதற்கு இந்தி மொழி கருவியாக உதவாது என்ற உறுதியான நினைப்பு. இவ்விரண்டும் உண்மை. இதற்குப் போலிச் சமாதானம் எதுவும் சொல்லமுடியாது. இதற்கு ஒரே பரிகாரம் வேண்டுமானால் அரசியல் சட்டத்தைத்திருத்தி ஆங்கிலமே ஆட்சிமொழியாகக் காலவரையறையின்றி நீடிக்கச் செய்தல். பின்வரும் சந்ததியினர் இன்ன மொழி மூலந்தான் தாங்கள் ஆண்டுகொள்ளவேண்டும் என்று இப்போது வரையறை செய்து அவர்கள் கையையும் வாயையும் கட்டிவைக்க வேண்டாம் அவர்களே இந்தமுடிவுசெய்துகொள்ளும்படி விட்டுவிடுவதே சிறப்பு.

ஆளும் குழுவினரின் தவற்றாலேயே கொடுமைகள் நிகழ்ந்தன என்று தோன்றுகிறது. அழிவு சக்திகள் ஆதிக்கம் பெற்றுவரும் நிலையில், மாணுக்கரையும், ஆசிரியரையும், பெற்றோரையும் ஆளும் குழுவினர் அன்றாடம் சந்தித்து அவர்கள் கடமையையும் அமைதி காக்கும் பொறுப்பையும் இதில் தங்கள் நிலைமையையும் தெளிவுபடுத்தி வந்திருக்கவேண்டும். இதெல்லாம் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பலநாள் முன்னதாகவே நடைபெற்றிருக்கவேண்டும்; நடைபெறவில்லை. நிலைமையை அவர்கள் அலட்சியம் செய்துவிட்டார்கள். இவ்வளவு மோசமாகவும், பெரும் அளவாகவும் அழிவு சக்திகள் தொழிற்படும் என்று எதிர்பார்க்கவில்லை. இது நாட்டின் துர்ப்பாக்கியம்.

இந்த நிலையின் விளைவாக, இன்று தமிழ்நாட்டு மாணுக்கர் கல்விக்கும் தங்களுக்கும் சம்பந்தமுண்டு என்பதையே மறந்து விட்டார்கள். கல்வியையே ஒன்றிரண்டு தலைமுறைக்குப்பலியிட்டுவிட்டால், எதிர்காலம் செம்மை

யாகக் காட்டும் என்று எண்ணும்படி பிரசாரமும் நடை பெறுகிறது.

மாணுக்கர் இந்த நிலைக்கு வந்ததற்குக் காரணம் நல்லொழுக்கத்துக்கும், தெய்வபக்திக்கும் பள்ளிப் படிப்பில் இடமில்லாது போனதே. சமயப்பற்றில்லாத அரசு என்ற பெயரில் கல்வியானது சமய உணர்ச்சி வேண்டாம் சமய உணர்ச்சி இருப்பது கூடாது என்ற அளவுக்குப் பள்ளி வாழ்க்கையை மாற்றிவிட்டது. சமய உணர்ச்சி என்பது ஒரு கட்டும் தறி போல. வாழ்க்கையானது எவ்வளவு தூரம் வளர்ந்திருந்தாலும் ஒடி உழன்ருலும் இந்தத் தறியோடு தொடர்பு கொண்டிருந்தாளுல் வாழ்க்கை நெறி கெட்டுப் போகாது. கல்வியும் பயனற்ற சமூக விரோதத்தை விளைவிக்காது. தெய்வபக்தி என்பது எல்லா ஒழுக்கத்துக்கும் முன்னேற்றத்துக்கும் அறிவுக்கும் சுதந்திரத்துக்குமே ஆணி வேர்; பண்பாட்டுக்கும் இதுவே ஆணி வேர். இந்த ஆணிவேரை நாம் அறுத்துவிட்டோம். அதனுலேயே இவ்வளவு கோளாறு. சமூக ஒற்றுமை, நேர்மை, நல்லவற்றில் விசுவாசம், இந்தியன் என்ற மார்தட்டுகிற பெருமை உணர்ச்சி ஆகியயாவும் குறைந்து போனதற்குத் தெய்வ உணர்ச்சி நீங்கியதே காரணம். ஆஸ்திகம் வேண்டாமென்ருல் நாஸ்திகம் ஏன் வளராது? நாஸ்திகம் என்ருல் நாசம் என்றே பொருள். இந்தியப்பண்பாடும், தமிழ்ப் பண்பாடும் மனித உணர்ச்சியுமே நாசம்.

இந்த நாசப் போக்கிலிருந்து நாம் மீளவேண்டும். இந்த மீட்பு வேலை அரசாங்கத்தின் பொறுப்புமட்டுமன்று தனிப்பட்ட ஒவ்வொரு மனிதனுக்கும் பெற்ருேருக்கும் பிள்ளைகளுக்கும் சிறப்பாக ஆசிரியர்களுக்கும் இந்தப் பொறுப்பு உண்டு. ஆகவே இதுபற்றி செய்யத்தக்க உடனடியான காரணங்கள் இரண்டு. ஒன்று, முற்கூறிய காரணங்களின்படி ஆங்கிலம் தற்போதைக்கு ஆட்சி மொழியாக இந்திய நாட்டில் அமையவேண்டும். இரண்டு பள்ளி

களில் எல்லா நிலையிலும் சிறப்பான சமயபோதனை இருக்க வேண்டும்.

இன்றையக் கிளர்ச்சிகளில், மக்கள் விவகாரங்களில் அடிப்படையாக இருக்கவேண்டிய அன்பு என்பது அடியோடு வறண்டுவிட்டது. பழிவாங்கும் எண்ணம் பதிலுக்குப் பதில் என்ற நினைப்பு மேலோங்கிவிட்டது. இதுமாறி திருவள்ளுவர் கூறிய அன்புநெறி ஓங்கவேண்டும். குற்றத்தைப் பொறுத்தல் நம் கடமை என்ற உணர்ச்சி முக்கியமாக அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு வரவேண்டும். சில ஆலயங்களில் ஆண்டவனுக்கே 'குற்றம் பொறுத்தநாதர்' என்ற பெயருண்டு. இது மக்கட் பண்புகள் அனைத்திலும் மேலானது.

இத்தகைய உணர்ச்சியும் அன்பும், தெய்வ பக்தியும் நம்மிடையே உதித்துப் பெருகவேண்டும். ஆண்டவன் நம் மக்களுக்கு நல்வழிகாட்டி இப்பண்புகளை எல்லோருக்கும் அருளுமாறு நாம் பிரார்த்திப்போமாக.

பிற செய்திகள்

திருவதிகை அப்பர் இல்லத்தில் 1—3—65 அன்று சிவானந்தக் கூபத் திறப்பு (கிணறு) விழாவும் மணலி மணிக்கட்டுக் கால் கோள்விழாவும் சிறப்புற நிகழ்ந்தன. தமிழ் நாடு இந்துமத அறநிலைய ஆணையர் உயர்திரு. M.S. சாரங்கபாணி முதலியார் B.A. B.L. அவர்கள் தலைமையில் வள்ளல் உயர் திரு. மணலி இராமகிருஷ்ண முதலியார் B.A. அவர்கள் கூபத்தையும், திருமதி. சரோஜினி வரதப்பன் அம்மையார் அவர்கள் மணலிமணிக் கட்டிடையும் திறந்துவைத்தார்கள்.

மலேயா திரு. கா. இராமநாதன் செட்டியார் அவர்கள் தெற்கு வியட்நாம், ஹாங்காங், தாய்லாந்து ஆகிய தேசங்களில சுற்றுப்பயணம் செய்தார்கள். செய்கோனில் தமிழிலும் ஹாங்காங்கில் சீனர்களுக்கிடையே ஆங்கிலத்திலுமாக இரு அந்தர்யோகங்கள் நடத்தினார்கள். செய்கோனில் சைவத்தைப் பற்றி ஆங்கிலத்திலும் தமிழிலும் பல சொற்பொழிவுகள் ஆற்றினார்கள். கடல் கடந்தும் அவர்கள் மேற்கொள்ளும் சமயப்பணி சிறக்க இறைவன் அருள்பாலிப்பானாக.

An Appeal for Starting an English Journal for Saiva Siddhantham

The Executive Committee of the Saiva Siddhanta Maha Samajam has in its meeting held on 31st January 1965 decided to publish a journal in English under the auspices of the Samajam to propound, explain and spread the doctrines of Saiva Siddhantha for which there is growing interest among scholars not knowing Tamil in India and abroad and even among Tamilians who are not in a position to study the original books in Tamil. The Journal will be a quarterly to begin with and would contain valuable articles. The subscription is tentatively fixed at Rs. 5/- per year. It is expected to inaugurate the journal in April 1965. The journal cannot be run successfully unless there are sufficient subscribers and advertisements. Those who are willing to subscribe (both individuals and institutions) to the journal are requested to indicate their sentiments without commitment at this stage. Further particulars will follow.

President,

Saiva Siddhantha Maha Samajam,

No. 12, East Mada Street,

Mylapore, Madras-4.

ஆங்கிலத்தில் சைவ சித்தாந்தத்துக்கு முத்திங்கள் பத்திரிகை

விண்ணப்பம்

சைவ சித்தாந்தம் உலகதத் துவங்களில் தலைசிறந்த து. சைவ சமயத்தைப் பற்றி நம் நாட்டிலும் பிற நாடுகளிலும் கற்றவர்கள் ஒருவாறு உணர்ந்திருந்தாலும், ஸ்ரீமெய்கண்ட தேவநாயனுர் முறைப்படுத்திய தர்சனத்தை சிலரே அறிவார்கள். மேனுட்டுத் தத்துவாசிரியர்களும், நம் நாட்டிலே வட நாட்டவர்களும், தமிழறியாத தென்னுட்டவர்களும், சமீப காலத்திலே ருஷியர்களும்,மற்றவர்களும்சைவசித்தாந்தத்தின் நுட்பங்களை அறிய அவாவுடையவர்களாக இருக்கிருர்கள். ஆனுல் மூலக்கிரந்தங்கள் தமிழில் இருக்கிறபடியால் அவர்கள் அவற்றைப்படித்துப் பயனடைய வாய்ப்பில்லாதவர்களாக இருக்கிருர்கள். காலஞ்சென்ற திரு. ஜெ. எம். நல்லசாமி பிள்ளை, திரு. க. சுப்பிரமணிய பிள்ளை இன்னும் சில மேனுட்டவர்கள் சில சித்தாந்த சாத்திரங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்கள். நல்லசாமி பிள்ளையவர்கள் தாம் நடத்திய' சித்தாந்த தீபிகை'' என்ற மாதப் பத்திரிகையில் ஆங்கிலத்தில் சைவசித்தாந்தத்தை விளக்கி எழுதி வந்தார்கள். அந்தப் பத்திரிகை இறந்துவிட்டபின் இதுகாறும் ஒருவரும்சைவசித்தாந்தத் துக்கென்று ஒருதனிஆங்கிலப்பத்திரிகை ஆரம்பித்தாரில்லை.மேலும்மேலும் சைவ சித்தாந்தத்தைப் பரப்பி அதன் சீரிய உண்மைகளினுல் உலகம் நலமடைய வேண்டுமென்று சிலநாட்களாகப்பலரும்விரும்பியுள்ளார்கள். சைவ சமயத்திற்குத் தலையாய நிறுவனமாகிய சென்னை சைவசித்தாந்த சமாஜமே இந்தச்சீரிய பணியில் பொறுப்பெடுத்துக் கொள்ளவேண்டுமென்று பலரும் விரும்பியதின் பயனுக சமாஜம் இதைப்பற்றித் தீவிரமாகச் சிந்தித்து வந்தது. சமீபத்தில் பேரூரில் நடைபெற்ற சமாஜ ஆண்டு விழாவிலும் இந்த எண்ணம் உறுதியடைந்தது. இவற்றின் பயனுக 31—1—1965-ஆம தேதியில்

நடைபெற்ற சமாஜ செயற்குழுக்கூட்டத்தில் ஒரு ஆங்கிலப் பத்திரிகை வெளியிட வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க இறைவன் திருவருளை முன்னிட்டு ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

ஒரு பத்திரிகையை துவக்குவதும், சரிவர நடத்துவதும் எளிய செயலன்று. நமது தமிழ் "சித்தாந்தம்" பத்திரிகையே அளவிலும். சந்தாதாரர்களின் எண்ணிக்கையிலும் இன்னும் குறைந்து இருக்கிறது. புதிய ஆங்கிலப் பத்திரிகை ஒன்று ஏற்படுத்துவதற்கு எழுத்தாளர்களைக் கண்டு பிடிக்க முடியும் என்றாலும் காகிதம், அச்சுக்கூலி, அஞ்சல்கூலி முதலியவைகட்கு முன்பணமாகத்தொகைதேவையாக இருக்கிறது. ஆங்கிலத்தில் எழுதக் கூடிய நம் சமாஜ உறுப்பினர்களும், நண்பர்களும், பிறரும் பலர் இந்த வேலையில் பங்கெடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். எனினும் கணிசமான அளவில் முன்பணம் தேவையென்பது சொல்லாமலே விளங்கும். பத்திரிகையை ஆரம்பித்துவைத்து, இரண்டாம் இதழிலேயே பண இக்கட்டுக்களில் அவதியுற்றுப் பத்திரிகையை நிறுத்துவதில் ஒரு பயனும் ஏற்படாது. பத்திரிகையின் சந்தா ஆண்டுக்கு ஐந்து ரூபாயாக ஏற்படுத்துவது தற்போதைய கருத்து. ஒரு இதழ் சுமார் 48 பக்கங்களுக்குக் குறையாமல் இருக்கும். மூன்று மாதத்துக்கு ஒருமுறை வெளிவரும். பத்திரிகை சித்திரை மாதம் முதல் தேதி ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது தக்க ஆதரவு உடனடியாக கிடைத்தால்தான் முடியும்: இறைவன் அருள்பாலிப்பாராக!

இந்த ஆங்கிலப் பத்திரிகைச் சந்தாதாரராகப் பதிவு செய்துகொள்ள விரும்புபவர்களும், வேறு விதங்களில் ஒத்துழைக்கவும் ஆதரவு அளிக்கவும் வருபவர்களும், உடனடியாகத் தெரிவித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

குறிப்பு:—ஆங்கில சைவ சித்தாந்த இதழ் வேண்டுவோர் இத்துடனுள்ள ஆங்கில விண்ணப்பப் பாரத்தை நிறைவு செய்து தெளிவான முகவரியுடன் செயலாளருக்கு அனுப்ப வேண்டுகிறோம்,

சமாஜ வெளியீடுகள்

	முன் விலை ரூ.	குறைத்த விலை ரூ.	
சைவ சமயச் சொற்பொழிவுகள்	3	2	
ஞானியாரடிகள் நினைவு மலர்	2	1	
பொன் விழா மலர்	1	50	ந.பை.
முருகன் முந்நூல்		40	,,
அறப் பயிற்சிமாலை		50	,,
குகார்ச்சனைத் திருமந்திரம்		6	,,
சிவஞான சித்தியார்-சிவாக்கிர யோகிகள் உரையுடன்		50	,,
சிவஞான போதம்-எளிய உரையுடன் (சிறியது)		12	,,
திருவெம்பாவை-உரையுடன் (சிறியது)		6	,,
அறுபத்து மூவர்		5	,,
சைவ சமய நிலையங்களின் தற்கால நிலை		12	,,
நான் நம்புவன சில		7	,,
விநாயகர் வழிபாடு		20	,,
திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி பொன் விழா வெளியீடு		1-25	,,
கந்தரனுபூதி—யந்திர உரையுடன்		1-25	,,
சிவஞான போதம்—தெளிவுரையுடன்		50	,,

தபால்–ரயில் செலவு தனி :

"சித்தாந்தம்":—சிறந்த மாதப் பத்திரிகை

ஆண்டுச் சந்தா ரூபாய் மூன்று.

இடைக்குமிடம் :—

சைவ சித்தாந்த மகா சமாஜம்

12, கீழ மாடவீதி, மயிலாப்பூர் சென்னை–4,

பிற செய்திகள்

ஆரணி குலாலர் வீதியில் திருநீலகண்ட நாயனுர் குரு பூசை விழா 25—1—65 அன்று மிகச் சிறப்புற நிகழ்ந்தது. அருள்திரு. பொன்னுசாமி அடிகளார் அவர்கள் தலைமையில் உயர்திரு. கா. மு. சுந்தர உடையார் அவர்கள் "அடியார் சிறப்பு" என்னும் பொருள் பற்றிப் பேசினுர்கள்.

தாம்பரம் ஸ்ரீ கற்பகவிநாயகர் பக்தஜன சபையின் ஏழாவது ஆண்டு விழா 7—2—65 அன்று உயர்திரு. S. சச்சிதானந்தம் பிள்ளை B.A; L.T. அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. புரசைத் திருநெறிக் கழகச் செயலாளர் உயர்திரு செ. சுந்தரனுர் அவர்கள் "திருக்கோயில்களும் திருமுறைகளும்" என்பது பற்றிப் பேசினுர்கள்.

மேலைமாம்பலம் இறைபணிக் கழகத்தின் சார்பில் சமயச் சிறப்புக் கூட்டம் 14—2—65 மாலை 6-30 மணிக்குக் காசி விசுவநாதர் திருக்கோயிலில் நிகழ்ந்தது, சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் தலைமையில் திரு. A. இராமச்சந்திர ஐயர் M.A., B.L. (துணை ஆணையர், அறநிலைய நிர்வாகத்துறை, சென்னை) அவர்கள் திருமுறைகளை நன்முறையில் பாடி வெற்றிபெற்ற குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கி வாழ்த்தினுர்கள். திருமுறைக் காவலர் திரு. அ. சோமசுந்தரஞ் செட்டியார், திரு. M. வடிவேலு, திரு. சங்கரநாராயணன் முதலியோர் கலந்து பேசி கூட்டம் இனிது நிகழ உறுதுணையாயிருந்தனர். அன்று காலை நடராஜருக்குச் சிறப்பு அபிடேகம் நிகழ்ந்தது.

தவத்திரு. சாந்தலிங்க அடிகளார் குருபூசை விழா 16—2—65 அன்று பேரூரில் சிறப்புற நிகழ்ந்தது. சிதம்பரம் மௌனசாமி மடத்துத் தலைவர் தவத்திரு. சபாபதி சுவாமிகள் அவர்கள் தலைமை தாங்கினுர்கள். மேலையூர் மாணிக்கவாசக ஞான தேசிக சுவாமிகள், திரு. இரா. செங்கோட்டு வேலன் கயப்பாக்கம் திரு. க. சோமசுந்தரம் செட்டியார் முதலிய பெருமக்கள் கலந்து சொற்பெருக்காற்றினர்.

அருள்திரு, காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் நிறுவிய கட்டளைப்படி கும்பகோணத்தில் 16—2—65ல் அன்னம்பாலிப்பும் திருக்காளத்தியில் 26—2—65 முதல் 3—3—65 முடிய தேவாரக் கோஷ்டியும் மதுரையில் 1—3—65 திங்களன்று மகா சிவராத்திரி புண்ணிய நாளில் தேவார விழாவும் சிறப்புற நிகழ்ந்தன. மேலும் 18—2—65 அன்று மயிலையில் திருவள்ளுவர் நினைவு அன்னம்பாலிப்பும் 5—3—65 அன்று திருக்காளத்தியில் திருக்கண்ணப்பர் நினைவு அன்னம்பாலிப்பும் நிகழ்ந்தன.

திருப்போரூர் ஸ்ரீ கந்தசாமி திருக்கோயில் குரோதி ஆண்டுப் பெருவிழா 6—2—65 முதல் 19—2—65 முடிய சிறப்புற நிகழ்ந்தது.

PRESS AND REGISTRATION OF BOOKS ACT

REGISTRATION OF NEWSPAPERS (CENTRAL) RULES, 1956 FORM IV (RULE 8)

Statement about ownership and other particulars about "SIDDHANTHAM" Tamil Monthly

1.	Place of publication	... 12, East Mada Street, Mylapore Madras-4.
2.	Periodicity of its Publication	... Monthly
3.	Printer's Name	... V. Sambandan
	Nationality	... Indian
	Address	... 33, Armenian Street, Madras-1
4.	Publisher's Name	... S. Satchidanandam Pillai, B. A., L. T.,
	Nationality	... Indian
	Address	... 175-A, Lloyds Road, Madras-14
5.	Editor's Name	... M. Arunachalam, M.A.,
	Nationality	... Indian
	Address	... Gandi Vidyalayam, Thiruchitrambalam (Via) Kuttalam, Tanjore Dt
6.	Names and addresses of individuals who own the newspaper and partners or share-holders holding more than one percent of the total capital.	"Saiva Siddhantha Maha Samajam" (Registered) with no share holders or partners but only members paying subscriptions. ["Siddhantham" is not a newspaper.]

I, S. Satchidanandam Pillai hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

(Sd.) S. Satchidanandam Pillai
Signature of Publisher.

Dated 9—3—1965

Printed at the Sengunthamithran Press, 33, Armenian St., Madras-1. by V. Sambandan, Edited by M. Arunachalam, M.A., and Published by S. Satchidanandam Pillai, B. A., L. T., for the Saiva Siddhantha Maha Samajam, 12, East Mada St., Mylapore, Madras-4.